# பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர் 14 இதழ் 12 3-6-1988 (யூன்3-யூன்10) பிரதி ரூபா 1-00 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு


உங்கள் செய்திகளை தயவு செய்து, பொருள்பட எழுதி அனுப்புங்கள். சாதாரண நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது மற்ற மக்கள் பயன்படத்தக்க விதமாகச் செய்திகளை எழுதுங்கள். திருச்சபை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி எதுவாக இருந்தாலும், செய்தியாக இருந்தால், நிச்சயம் எமது பத்திரிகையில் முன்னுரிமை கொடுக்கப்படும்.

தரம் கண்டு, திருத்தங்களுடன் பிரசுரிப்போம்.

சில்லாலை மக்கள் வண. யோசவ்வாஸ் அடிகளாரின் 337வது பிறந்ததினத்தை நினைவுகூர்ந்தனர்.

# சில்லாலைப் பங்கில் மறைப்பணி புரிந்த யோசவ்வாஸ் முனிவருக்கு ஜனன விழா

**ஏப்ரல் 24ஆம் திகதி யோசவ் வாஸ் முனிவரின் 337ஆவது பிறந்த தினமாகும். அன்று அவர் பணித்தளங்களில் ஒன்றான சில்லாலையில் மக்கள் அவரை நன்றியுடன் நினைவுகூர்ந்தனர். அவரது திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து, நினைவுமலர் வெளியிட்டு, போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் மூலம் விழாவைச் சிறப்பித்தனர்.**

சில்லாலைக் கதிரைமாதா ஆலயப் பங்கினைச் சேர்ந்த யோசவ்வாஸ் அடிகளார் சங்கம் 1988 சித்திரை 24ம் தேதி தமது 15ம் ஆண்டு நிறைவு விழாவினையும், அடிகளாரின் 337ம் ஜனன நிறைவு விழாவையும் ஒருங்கே கொண்டாடினார்கள். விழாத்திருப்பலி, கலாச்சார நிகழ்ச்சிகள், கட்டுரைப்போட்டிகள், பேச்சுப் போட்டிகள் பல அங்கு இடம்பெற்றன. அருள்திரு. நீக்கிலஸ் குறூஸ் அடிகள் பங்குத் தந்தையுடன் விழா நிகழ்ச்சிகளில் பங்குபற்றினார்.

பங்குத்தந்தை அருள்திரு. B. F. பொனிபஸ்அடிகள் தமதுரையில் ''வண.யோசவ்வாஸ் முனிவர் குருத்துவத்திற்குத் தம்மை அர்ப்பணித்து அயராதுழைத்து அதன் பயனாய், ஒல்லாந்தர்களின் வேதகலாபனையிலிருந்து எம்மக்களைக் காத்துக்கொள்ள நம்பிக்கை ஊட்டினார். வாஸ்அடிகள் சில்லாலையில் தங்கியிருந்த வேளை அவரைக் கைதுசெய்வதற்கு ஒல்லாந்தர்கள் பலமுயற்சிகளை மேற்கொண்டனராயினும் மக்களின் சாதுர்யமான உதவியால் அம்முயற்சிகள் யாவும் முறியடிக்கப்பட்டன. தோல்வியடைந்தஒல்லாந்தர்கள் சினங்கொண்டு மக்களை - குறிப்பாகத் தலைவர்களை ஈவிரக்கமின்றி இம்சித்தனர். ஆயினும் வாஸ் அடிகள் எம்மக்கள் குறையாத செல்வமும், அழியாத புத்திர பாக்கியமும் அடைய அருள் பாலித்தார்'' என்றார்.

ஆலயத்தின் முன்னால் உள்ள அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு அருட்தந்தையர்கள் மாலையணிவித்தனர். வாஸ் அடிகளார் விரைவில் புனிதர் பட்டம் பெறவேண்டி விசேட செபவழிபாடும் நடத்தப்பட்டது.

வண. யோசவ் வாஸ் அடிகள் இலங்கை மண்ணில் காலடி வைத்த முந்நூறாண்டு நிறைவுச் சிறப்பு நினைவிதழ் அன்று பங்குக்குரவரால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது. அ. யேசுதாசன்

## மடுப்பதியை நோக்கி பாதயாத்திரை

மரியாளின் ஆண்டு உளமாற்றத்திற்கான இலட்சியத்தை உருவாக்க உதித்த ஆண்டு. உளமாற்றமேன்? உலகம் பூராவும், சிறப்பாக நம் நாடும் அவாவி நிற்கும் சமாதானத்தை நிலைநாட்ட, தனிமனிதனின் உளமாற்றமே ஆணிவேர்.

எனவே எம் ஆயர் மேதகு சவுந்திரநாயகம் ஆண்டகை அவர்களின் வேண்டுகோளின்படி எம் பங்குத் தந்தை அவர்கள் மடு அன்னையை நோக்கி பெரிய பண்டிவிரிச்சான், சின்னப் பண்டிவிரிச்சானிலிருந்து பாத யாத்திரை ஒன்றை, 14-5-88 மாலை 3 மணியளவில் ஆரம்பித்தார். பக்திச் சபைகள் தங்கள் கொடிகளுடன் செல்ல, பங்கு மக்கள் அணைவருமே, ஏன்? பிறமத மக்களுமே பங்குகொண்டனர். திருச்செபமாலையும், அன்னையின் புகழ்ப்பாக்களும் உளமாற்றத்திற்காக ஒருங்கு சேர்ந்து எழுந்துகொண்டேயிருந்தன.

மடுப்பகுதியை அண்மித்தோம். அங்கே முகாமிட்டிருந்த இராணுவ வீரர் பிரமித்து பவனிக்கு மரியாதை செலுத்தினர். லூர்து கெபியில் பங்குத் தந்தை அருள்திரு சூசைப்பிள்ளை அடிகளாருடன், அருள்திரு தேவசகாயம் அவர்களும் கூட்டுத்திருப்பலி நிகழ்த்தினர்.

மடுப்பரிபாலகர் அவர்கள் ''அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்'' என்ற திருமொழியைப் பீடிகையாகக் கொண்டு உள்ளமுருக மறையுரை ஆற்றினார். பாலர், இளைஞர், பெற்றோர், முதியோர் யாவரும் அணைகடந்த வெள்ளம்போல் அருட்சியுடன் அச்சமின்றி நம்பிக்கையுடன் பங்குகொண்டமையைப் பாராட்டி நன்றி உரை வழங்கினார் எம் பங்குத்தந்தை அவர்கள்.

—செல்வி ஜெனிற்ரு மேரி பிரான்சிஸ்

## நற்சமூக நடுநிலையத்தில் "புதிய உலகம்" அலுவலகம்

இம் மாதம் முதல் "புதிய உலகம்" சஞ்சிகையின் அலுவலகம், யாழ். மறைவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நற்சமூக நடுநிலையத்திற்கு மாற்றப்பட்டிள்ளது. இல. 115, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ''நற்சமூக நடுநிலையம்'' அமைந்துள்ள கட்டிடத்தில் ''புதிய உலகம்'' அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. புதிய உலகம் அடுத்த இதழ் இம்மாதம் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய உலகம் அண்மைக்காலத்தில் தடைப்பட்டமைக்கு நிதி நெருக்கடி ஒரு முக்கிய காரணியாகும். தனியார் சேமிப்பு வங்கியில் வைப்பிலிடப்பட்ட பணம் முடங்கிக் கிடப்பதால் பெரும் நிதி நெருக்கடி நிலவுகிறது.

நற்சமூக நடுநிலையம் தற்போது நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளதுடன், அலுவலகத்தையும் உபகரணங்களையும், உதவியாளர்களையும் தமது நடுநிலையத்துக்கு மாற்றியுள்ளனர்.

மே 18ஆம் திகதி அங்கு நடைபெற்ற கூட்டத்தின் போது புதிய உலகம் ஆசிரியருக்கு உதவியாக ஒரு துணை ஆசிரியரும், வேறு ஒன்பது பேரும் நியமிக்கப்பட்டனர். புதிய உலகம் சஞ்சிகை விநியோகம், நிதி வசதி செய்யவென ஐவர் அடங்கிய குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## துறவிகள் இருவர் குருக்களாகத் திருநிலைப்படுத்தல்

புனிதவளன் துறவிகள் சபையைச் சேர்ந்த அருட் சகோதரர்கள் M. இம்மானுவல், A. J. டானியல் ஆகிய இரு துறவியரும் எதிர் வரும் 12-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4-00 மணிக்கு குருக்களாகத் திருநிலைப்படுத்தப் பெறுவர்.

திருமலை—மட்டுநகர் ஆயர் பேரருள்திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் மட்டக்களப்பு புனிதவளன் துறவிகள் சபைச் சிற்றாலயத்தில் திருநிலைப்படுத்தல் சடங்கினை நிறைவேற்றுவார்கள்.

புதிய குருக்கள் இருவரும் புனித வளன் துறவறச் சபை உறுப்பினர்களாகவே தொடர்ந்தும் இருப்பர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களுக்கு இறையாசியை வேண்டுவோமாக.

## திருத்தந்தையின் யாத்திரை

மே 7 முதல் 19வரை திருத்தந்தை லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு மேற்கொண்ட விஜயம் அவரது பத்து ஆண்டு காலத்தில் உலக நாடுகளுக்கான மறைத்தூதுப் பயணங்களில் 37வது ஆகும். பேறு, உருகுவே ஆகிய நாடுகளுக்கு சென்றது இது 2வது தடவை. பொலிவியா, பராகுவேக்கு இதுவே முதலாவது பயணமாகும்.

உலகின் 8667 லட்சம் கத்தோலிக்கரில் 41% லத்தீன் அமெரிக்க நாடுகளில் வாழ்கின்றனர்.

ஐரோப்பாவுக்கடுத்ததாக, திருத்தந்தை லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கே அதிக பயணங்களை மேற்கொண்டுள்ளார்.

உருகுவே நாட்டின் பாதுகாவலியான ''முப்பத்து மூன்றின் கன்னி'' (Virgin of the Thirty-Three) மரியாளிடம் தனது யாத்திரை என இத்திருப்பயணத்தை அர்ப்பணித்த திருத்தந்தை, தாம் மரியாளின் ஆண்டில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மரியாளின் வழிபாட்டுத் தலங்களுக்கு தவறாது யாத்திரை செய்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

## திருவிழிப்பு

பரிசுத்த ஆவியின் வருகையை முன்னிட்டு பதுளை புனித மரியன்னைதேவாலயத்தில் திருவிழிப்பு 21-5-88 அன்று அருள்திரு மார்சல் இராஜநாயகம் தலைமையில் நடைபெ[illegible] பங்கைச்சேர்ந்த இளை[illegible] அனைவரும்இதில்ப[illegible]னர்

தகவல்:- [illegible]

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிற[illegible] விழிப்பது வீண்**

## எம் கருத்து

### முணுமுணுப்பு

எம் கருத்துப் பகுதியில் தொடர்ந்து அரசியல் கருத்துக்களை முன் வைப்பது பலருக்கு அதிருப்தியை ஏற்படுத்தக் கூடும். கத்தோலிக்க பத்திரிகை ஆன்மீக விடயங்களைப் பற்றிய கருத்துக்களை முன் வைப்பதற்குப் பதிலாக அர்த்தமற்ற அரசியலில் ஏன் ஈடுபடவேண்டும் என வினவக் கூடும். பொறுத்தருளுங்கள்.

நாம் வாழும் சூழ்நிலையில் விசேஷமாக, இங்கு நடந்து கொண்டிருக்கும் இராணுவ நடவடிக்கைகளாலும், அமைதிப்படையின் நடவடிக்கைகளாலும், போராளிகளின் செயற்பாடுகளாலும், மக்கள் நிலைகுலைந்துள்ளனர். எனவே இவற்றினால் மக்கள் வெறுப்படைந்த நிலையில், எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து, பாலும் தேனும் பொழியும் கானான் நாட்டுக்குச் செல்கையில் வழியில் பாலைவன அனுபவத்தில் வேதனையுற்று, நாம் எகிப்திலேயே இருந்திருக்கலாமே என முணுமுணுத்து, இறைவனின் கோபாக்கினைக்கு உள்ளான மக்கள் போல் ஆகிவிடக் கூடாது என்பதற்காகவே, மக்களை உறுதிப்படுத்தவும், நம்பிக்கையூட்டவும் தலைவர்கள் தேவை.

தமிழ், தமிழ் என்று உரிமைக் குரல் எழுப்பியதாலேயே தமிழர்கள் இத்தனை இன்னல்களையும் பட்டார்கள். கிடைத்ததோடு திருப்திப்பட்டவர்களாக இருந்தால் இத்தனை உயிர் இழப்புக்கள், அழிவுகள் வந்திருக்குமா என்று கேட்பாரும் நம்மிடையே இல்லாமலில்லை.

ஆனால் உண்மையில் திட்டமிட்ட தமிழ் இன அழிப்பு, உரிமை மறுப்பு, குடியேற்றம், சிங்கள பேரினவாதத்தின் அடக்கு முறை என்பனவே தமிழ் மக்களை இந்த உரிமைப் போராட்டத்தில் பங்கு கொள்ளத் தூண்டியது என்பதனை மறந்துபோகக் கூடாது.

அன்றாடம் நிகழும் உயிரிழப்புக்கள், அழிவுகள், இன்னல்களைக் கண்ணுறும் மக்கள், சலிப்படைந்து, விடுதலை உணர்விழந்து, மனம் உடைந்து போகாதிருக்க வேண்டும் என்பதற்காகவே நாம் இப்பகுதியில் நம்பிக்கை ஊட்டுகின்றோம், எமக்கு ஒரு நல்ல எதிர்காலம் உண்டு என்று மனத்திடன் கொள்ளச் செய்கின்றோம்.

தமிழ் இனத்தை ஈவு இரக்கமின்றி அழித்துவிடும் முயற்சியின் உச்சக்கட்டமே சென்ற ஆண்டு மே மாத இறுதியில் வடமராட்சியில் நடந்த "ஒப்பரேஷன் லிபரேஷன்". தமிழ்மக்கள் மேல கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டுவிட்டு இலங்கை அரசு அதற்கு விழாக் கொண்டாடுகிறது. இன்று பட்டங்கள், பரிசில்கள் வழங்குகிறது. இனவாதம அரசின் கைவந்த கலை என்பதற்கு வேறு சான்றுகள் வேண்டுமா?

இதுவரை காலமும் தமிழ் மக்கள் பல இன்னல்களுக்கு ஆளான போதிலும், கடந்த தசாப்தத்தில் ஏறபட்ட நிகழ்வுகள் எமக்கு ஒரு நல்ல முடிவைத் தரும் என்று எதிர்பார்க்க முடியும். நாம் வாழும இந்நாட்கள் அறுவடையின் காலம் என்றாலும் அது மிகையாகாது. எனவே தான் "கண்ணீரோடு விதைத்தவன் பெருமகிழ்வோடு அறுவடை செய்கிறான்" என்பதற்கொப்ப, எமது கண்ணீர் மகிழ்வான முடிவைத்தரும் எனக் காத்திருக்கிறோம்.

இந்நாட்களில் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதும், நல்வழி காட்டுவதும் மிகவும் அவசியமானது.

இந்துக்கள் எல்லாரும் தமிழர்கள். பௌத்தர்கள் எல்லாரும் சிங்களவர்கள். கிறிஸ்தவர்களாகிய நாம் இரு இனங்களிலும் உள்ளோம். கடந்தகாலங்களில் பேரின வாதத்துக்கும், இன அழிப்புக்கும் கிறிஸ்தவர்கள் பயன்படுத்தப்பட்டதை நாம் மறுக்க முடியாது. அன்பைப்பற்றிப் பேசி, ஒற்றுமையைப்பற்றிப் பேசி, சமாதானத்தைப் பற்றிப்பேசி, உரிமை மறுப்புக்குத்துணைபோன நிகழ்வுகள் ஏராளம், மீண்டும் நாங்கள் அததகைய ஒரு செயலுக்கு உடந்தையாகி விடக் கூடாது.

பாலைவனத்தில் பரிதவித்த மக்கள் இறைவனுக்கு எதிராக முணுமுணுத்தது போல, தற்கால நிகழ்வு[illegible] மத்தியில் பெரும்பான்மையான தமிழ் மக்க[illegible]ணுமுணுக்கும் காலமிது. எனவே மக்களுக்கு[illegible]க்கையூட்ட முன்வாருங்கள்.

இ[illegible]னும் இழிவந்த செய்யார்
நடு[illegible] காட்சி யவா.

## "மீட்பரின் அன்னை"

### திருத்தந்தையின் சுற்றுமடல் (17)

கொப்ரிக், எத்தியோப்பிய மரபினர்க்கு மரியாளின் மறைபொருளைத் தியானிக்கும் இம்முறை அலெக்சாந்திரியா புனித சிறிலினால் அறிமுகப் படுத்தப்பட்டது. இவர்களோ வென்றால் அளவிறந்த கவி மலர்களால் இதைக் கொண்டாடியுள்ளனர். சீரியரான புனித எப்பிரேம் என்னும் கவிதாமேதை. — இவர் பரிசுத்த ஆவியின் யாழ் என அழைக்கப் படுபவர் — மரியாளின் புகழை அயராது பாடினார் சீரியத் திருச்சபையின் பாரம்பரியத்திலேயே இன்றும் அழியாத ஒரு முத்திரையை விட்டுச் சென்றுள்ளார்.

ஆர்மேனியா நாட்டின் திலகமான நரேக்நகர் புனித கிறகோரியார் இறையன்னையைப் பற்றிய தமது புகழ்ப்பாடலில் மிகுந்த கவிதா உணர்ச்சியுடன் புனித அவதாரம் என்னும் மறைபொருளின் பல்வேறு அம்சங்களைப் பாடுகின்றார். அவைகள் ஒவ்வொன்றும் மனுவுரு வெடுத்த வார்த்தையின் அன்னையான கன்னிமரியாளின் நிகரற்ற மகத்துவத்தையும், பேரெழிலையும் புகழ்ந்து பாடுவதற்கு அவருக்கு ஒரு வாய்ப்பாக இருக்கின்றது.

புராதன கீழைத் திருச்சபைகளின் வழிபாட்டில் மரியாளுக்கென ஏராளமான திருநாட்களும், திருப்பாடல்களும் உள்ளன. இங்ஙனம் அச்சபைகளின் வழிபாட்டில் மரியாள் சிறப்பிடம் பெற்று விளங்குவது வியப்புக்குரிய ஒன்றல்ல.

32. பைசாந்திய திருவழிபாட்டில் திருப்புகழ்மாலையின் ஒவ்வொரு பகுதியிலும் அன்னையின் புகழ் அவளது திருமகனது புகழோடும், அத்திருமகன் மூலமாக பரிசுத்த ஆவியில் தந்தைக்கு ஒப்புக்கொடுக்கப்படும் புகழோடும் இணைந்துள்ளது. புனித கிறிசோஸ்தொம் அருளப்பரின் நற்கருணை வழிபாட்டில் "எபிகிளேசிஸ்" (Epiclesis) என்ற பகுதியின்பின், கூடியிருக்கும் மக்கள் இறையன்னையைப் புகழ்ந்து பாடுகின்றனர்: "மேலான பேறு பெற்றவளும் தூய்மை நிறைந்தவளும் எங்கள் ஆண்டவரின் தாயுமான ஆண்டவரின் தாயுமான இறை அன்னையே! உம்மைப் பேறு பெற்றவளெனப் போற்றுவது உண்மையில் நீதியேயாம். கெருபீமைவிட அதிமேன்மை வாய்ந்தவளும், செருபீமைவிட ஒப்பற்ற மகிமை வாய்ந்தவளுமாகிய உம்மைப் புகழ்ந்தேத்துகிறோம். கன்னிமையை இழக்காமல் இறைவார்த்தையானவரைப் பெற்றெடுத்தவள் நீரே! உண்மையில் இறைவனின் அன்னை நீரே!"

ஒவ்வொரு நற்கருணை வழிபாட்டிலும் மரியாளுக்கு அளிக்கப்படும் இந்தப் புகழ்ச் சிந்துதிகள் விசுவாசிகளின் விசுவாசம், பக்தி, செபப்பண்பு ஆகியவற்றை உருவாக்கி வந்திருக்கின்றன பல நூற்றாண்டு காலமாக அவை அவர்களது ஆன்மீக உளப்பாங்கை ஊடுருவிநின்று பரிசுத்த தேவதாயிடத்தில் ஆழமானதொரு பக்தியை பேணி வளர்த்துள்ளன,

தேனருவி

## திருவுடல் திரு இரத்தத் திருவிழா (05-06-88)
## ஓர் உடன்படிக்கை

யாத். 24: 3-8 எபிரேயர் 9: 11-15 மாற்கு. 14: 12-26

இன்று பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுகின்றன. அரசியல் கட்சிகளுக்கிடையே, நாடுகளுக்கிடையே, நிறுவனங்களுக்கிடையே எனப் பலவுண்டு. அமைதிக்கெனச் சில, அணுவாயுதக் குறைப்புக்கு எனச் சில, இன்னும் சில தற்பாதுகாப்பு நடவடிக்கையாக நடைபெறுகின்றன. சில ஆக்கத்திற்கும்; சில அழிவிற்கும் வழிகோலுகின்றன.

மீட்பின் வரலாற்றில் இறைவன் மக்களுடன் உடன்படிக்கை செய்துகொண்டார். ஆண்டவருக்கு பிரமாணிக்கமாய் இருப்போம் என்று மக்களும் வாக்குப்பண்ணினார்கள். அதனால், மோயிசன் கன்றுக்குட்டிகளின் இரத்தத்தின் பாதியைப் பலிப்பீடம் ஒன்றில் ஊற்றி மற்றப்பாதியை மக்கள மீது தெளிதது உடன்படிக்கையை இரத்ததகினால் உறுதிப்படுத்தினார். தவறுவதே மனித வரலாறு ஆயிற்றே. ஒரு பகுதி உறவை முறித்துக்கொண்டால் அடுத்த பகுதியும கை கழுவி விடுவது சாதாரண ஒப்பந்தத்தின் இயல்பு. ஆனால் இறைவன் தமது வாக்குறுதியில் என்றும் எப்போதும் பிரமாணிக்கமாய் இருப்பவர். இதை வெளிப்படையாகவும் நிரூபித்துவிட்டார்.

புதிய, நித்திய உடன்படிக்கைதான் இறைவனின் ஒரே மகனான இயேசுவின் மரணம், அவர் உடல், அப்பம் பிட்கப்படுவது போல நொறுக்கப்பட்டுப் பகிரப்படுகிறது. கன்றுகளின் குருதி கொட்டப்படுவது போல அவரது திரு இரத்தம் சிந்தப்படுகிறது. இது தான் புதிய உடன்படிக்கையின பலியாகும். இது ஒப்பிட முடியாத, ஈடுசெய்ய முடியாத பலியாகும். இது ஒரு வரலாற்று உண்மை.

இறைவனின் உடன்படிக்கை வெறும தாளிலும், போலிகைகுலுக்குதலிலும், நடிப்பிலும், பொய்ப்பிரச்சாரத்திலுமல்ல, மாறாக அவர் தியாகத்திலும், உண்மைத் தனத்திலுமே கைச்சாத்திடப்பட்டது.

எனவே இன்றும் இறைமக்கள் நினைந்து கொண்டாடும் திருப்பலி வெறும் வெளிச்சடங்காகவோ, வாடிக்கையாகவோ அமையக் கூடாது. மாறாக இது ஒரு வாழ்க்கை அனுபவமாக வேண்டும். இதில் மக்கள் வாரம் தோறும், ஏன் சிலர் தினந்தோறும் பங்கு கொள்ளுகிறார்களே. உண்மையில் இவர்கள் உடன்படிக்கை உறவில் வளருகிறார்களா? இத்துணை மகத்தானதும், அறிவுக்கெட்டாததுமான புனித நிகழ்ச்சியில் பலர் சுய கௌரவத்திற்காக, பொழுதுபோக்கிற்காக, கட்டாயத்திற்காக அன்றேல் அரைகுறையாகப் பங்கெடுப்பது திருப்பலியைப் பங்கப்படுத்துவதாகவே அமைகிறது. இன்னும் சிலர் வைபவங்களை அழகுபடுத்தும் ஒரு மலிவான நிகழ்ச்சியாகக் கருதுகிறார்கள்.

இவ்வுடன்படிக்கையின் கொண்டாட்டம் பல திருமண உறவுகளுக்கும், நட்பிற்கும், ஒப்பந்தங்களுக்கும் ஒரு பெரும் சவாலாகிறது. வாழ்வில் பிரமாணிக்கம் தவறுபவர்களும் ஒரு விதத்தில் திருப்பலிக்குப் பங்கம் விளைவிப்பவர்களே.

இறைவனின் தியாக அன்பையும், நிரந்தரமான உடன்படிக்கை உறவையும் ஆழமாகவும், நன்றியுணர்வுடனும் உணர்ந்து புதுப்பிப்பதே திருப்பலியாகும். இது மனித ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் புதுப்பித்து உறுதிப்படுத்தும் கட்டமாயும் அமையட்டும்.

சுவாமி. ஜீவா போல். அ.ம.தி.

## பொதுக்காலம் 11-ம் ஞாயிறு (12-06-88) பலவீனம் பலமாகிறது

எசேக்கியேல். 17: 22—24; கொரிந்தியர். 5: 6—10; மாற்கு. 4: 26—34

23ம் அருளப்பர் திருச்சபையின திருத்தந்தையாய் தேர்வு செய்யப்பட்டதும், அவர் தம் மீது சுமத்தப்பட்ட பொறுப்பை நினைந்து குளம்பியவராய், பதட்டமடைந்த நிலையில் இருந்தாராம். தூக்கம கூட வர மறுத்ததாம். அப்போது இறைவன் அவரது உள்ளத்தில் பேசுவது போன்ற ஒரு நினைவு. "ஆஞ்சலோ, நீரல்ல நான்தான் திருச்சபையை வழி நடத்துவது" இந்த உண்மையை உணர்ந்த திருத்தந்தை அமைதியானார். திருச்சபை வரலாற்றில் அவர் ஒரு "பெரும் புனிதர்"

இறையரசு இவ்வுலக அரசுகள், நிறுவனங்கள் அனைத்தையும்விட பிரமாண்டமானது. ஆனால் அதன் ஆரம்பமோ சாதாரணமானதும், எளிமையானதுமாகும், கடுகுமணி போன்ற அற்பமான தோற்றம் பார்வைக்குப் பலவீனமானது. அந்தப் பலவீனம்தான் இறைவனது கரங்களில் மிகப்பலமாகிறது. இறையரசின் ஊற்றும், உருவாக்கமும், நிறைவும் இறைவனே. ஆனாலும் அதன் வளர்ச்சிக்கு விதைகளாவது பலவீனமான மனிதர்களே.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

வீட்டுக்கொரு ப[illegible]ன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

# 40 ஆண்டு ஆசிரியப்பணியில் அருட்செல்வி கொலம்பா



இறையச்சமும், இறைபணியும் ஒருங்கே அமைந்த அருட்செல்வி அவர்கள் தமது நாற்பது ஆண்டுகால ஆசிரியப்பணியில் யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தில் (O. L. R.) குழந்தைச்செல்வங்களின் கல்வி வளர்ச்சிக்காக 1958/59 இலும், 1979 தொடக்கம் 1988 வரையிலான பத்து ஆண்டு காலப் பகுதியிலும் திறம்படச் சேவையாற்றித் தனது 60வது வயதில் ஓய்வுபெறும் இந்நாளை எண்ணி புனித மரியாள் வித்தியாலயமும், அதிபர், ஆசிரியர், ஆசிரியைகள், மாணவர்களும் பெருமை அடைகின்றனர்.

அன்னாருடைய அரும்பணி தடைப்படுதல் இவ்வித்தியாலயத்துக்கு ஒரு பேரிழப்பாகும். அவர், தம் காலத்து ஆற்றிய சேவை நமதுசிறார்களின் இதயக் கோயிலின் ஒரு தூண்டாமணி விளக்காகும்; வித்தியாலயத்தின் மங்காத ஒளியாகும்.

தனது பணியில், எள்ளளவேனும் சலிப்படையாது, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற வரைவிலக்கணத்துக்கு எடுத்துக்காட்டாகவிளங்கியஉத்தமியாவர்; பழகுவதற்கு இனிய பண்பாளர்; மற்றவர் மனங்கோணாத வகையில் வினையாற்றும் திறன்மிக்கவர்; தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தும், மற்றவர்களையும் அவ்வழியிட்டுச் செல்லும் ஒரு மீகாமன் போன்றவர்.

அவரது சேவையை இவ்வித்தியாலய நலன் விரும்பிகள், பெற்றோர், பா. அ. சங்கம், அதிபர், ஆசிரிய - ஆசிரியைகள், மாணவர்கள் என்றும் மறவாது நன்றியறிதல் உடையவர்களாய் இருப்பதுடன் அவருக்குத் தத்தமது நல்லாசிகளையும் மனம் உவந்து தெரிவிக்கின்றனர்.

அருட் செல்வி அவர்கள் தனது பிற்கால வாழ்விலும் நல்லன ஆற்றி, இனிதே வாழ்ந்து இறைஆசீர் பெற்றிட நாம் அனைவரும் அன்னை மரியாளின் மலர் பாதம் இறைஞ்சுகின்றோம்.

# யாழ். புனித மரியாள் வித்தியாலய அதிபர் திரு. வில்லியம் அவர்கள் ஓய்வு பெறுகிறார்



கடந்த பதினைந்து ஆண்டுகளாக யாழ்ப்பாணம் புனித மரியாள் வித்தியாலயத்தில் அதிபராகவிருந்து அளப்பரிய சேவையாற்றிய திரு. வெ. வில்லியம் அவர்கள் தமது அறுபதாவது வயதில் கல்விச் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். அவர் தம் தன்னலமற்ற சேவையை நினைவுகூர்ந்து அவர் தமைப் பாராட்டுமுகமாக 23-05-88ல் யாழ்/புனித மரியாள் வித்தியாலயத்தில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் ஆகியோர் ஒன்றுசேர்ந்து ஒரு பெரு விழா வெடுத்தனர்.

திரு. வில்லியம் அவர்கள் கடந்த நாற்பதாண்டு காலமாக நல்லாசிரியனாய், திறமைமிக்க அதிபராய்த் தமிழ்கூறும் நல்லிடங்கள் பலவற்றில் நற்பணியாற்றியவர். கால் நூற்றூண்டு காலமாக அதிபராகவிருந்து அளப்பரிய பணிபுரிந்தவர்.

இவர் ஒரு திறமை மிக்க அதிபர் என்பதை இந்தநாடறியும். பாடசாலையில் ஒழுங்கு கட்டுப்பாடு இவைகளை நடைமுறைப்படுத்துவதில் அவர் கண்ணுங் கருத்துமாயிருந்தார். ''கடமை முதல்'' என்பது அவரது தாரக மந்திரம். நிறைந்த புலமையும், சிறந்த நிர்வாகத் திறமையும் உடையவர். அவரது பாடசாலை நிர்வாகத்தைப் பாராட்டாத பெற்றோர் இல்லை எனலாம். கண்டிப்பானவர்போலத் தோற்றமளிப்பினும் கனிந்த உள்ளம் கொண்டவர். அந்நியர்க்கேனும் தீமை ஆற்றிட அச்சம்கொள்பவர். பாடசாலையிலுள்ள ஒவ்வொரு பிள்ளையையும் தன் சொந்தப்பிள்ளை போல் நேசித்து வந்தவர். மாணவரின் நல்வாழ்வுக்காக நாள் முழுதும் உழைத்தவர். இத்தகைய அறிவும் ஆற்றலும் கொண்ட பெருந்தகை வில்லியம் அவர்களின் காலத்தில் புனித மரியாள் வித்தியாலயம் அனைவரும் வியக்கத்தக்க வகையில் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியடைந்தது. யாழ்நகரில் புகழ்பெற்ற பாடசாலைகளுள் ஒன்றாகப் புனித மரியாள் வித்தியாலயமும் திகழ்வதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர் அதிபர் வில்லியம் அவர்களே. இதனாலே தான் இங்குள்ள மக்கள் வில்லியம் தான் O.L.R. என்றும், O.L.R. தான் வில்லியம் என்றும் கூறி வருவதைக் கேட்கலாம்.

அதிபர் வில்லியம் அவர்கள் இங்கு மாத்திரமல்ல ஊர்காவற்றுறை, மன்னார், கொழும்புத்துறை ஆகிய இடங்களிலும் சிறந்த பணியாற்றி மக்களின் நன்மதிப்பையும் அன்பையும் பெற்றவர். இன்றும் இவர் ஆசிரியர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் முன்மாதிரியாகவும் விளங்குகிறார். ஆசிரியர்கள் மத்தியில் அவருக்கொரு தனி மதிப்புண்டு. யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெற்ற கடன்சபைத் தேர்தலில் எந்தவொரு ஆசிரிய சங்கத்தின் சார்பிலும் போட்டியிடாது தனிப்பட்ட வேட்பாளராகப் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டிய ஒரே ஒருவேட்பாளர் திரு. வில்லியம் அவர்களே ஆசிரிய உலகம் எவ்வாறு அவரை மதித்திருந்தது என்பதற்கு இது ஒரு உதாரணமாகும்.

இத்தகைய பெருமைகளெல்லாம் பெற்ற அதிபர் அவர்கள் மாணவர்களின் பாதுகாவலராகவும், ஆசிரியரின் வழிகாட்டியாகவும், பெற்றோர்களின் நம்பிக்கையாளராகவும் விளங்கினார் என்பதில் ஐயமில்லை. ''அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராகக் கொளல்'' என்பது வள்ளுவர் வாய்மொழி. ஆதலால் எம் மாணவரும் ஆசிரியரும் பெற்ற பேறு இன்னும் பிறரும் பெற வேண்டும். பெற்றுப் பயனடையவேண்டும். இத்தகைய பெரும்பேறு அனைவரும் பெறுதற்கு அதிபர் திரு. வெ. வில்லியம் அவர்கள் இன்னும் நாற்பது ஆண்டுகள் ஆயுள்பெற்று நோயும், கவலையும் இல்லாத நிறைவு வாழ்க்கை வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் செய்தல்வேண்டுமென அவன் இணையடிகள் நினைந்து ஏற்றி வணங்குவோம்.

—நா. திருச்செல்வம்

# மனிதரும் மதிகேடும்-2

கடவுள் உலகத்தைச் சிருட்டித்தார். காலமும் பரப்பும் அதோடு தொடங்கியவை. அவருடைய கட்டளைப்படியே சராசரம் உருவானது. நீரிலும் தரையிலும் ஆகாயத்திலும் உயிர்கள் கிளம்பின. இவையெல்லாம் நல்லதென்று கண்டார். தனது படைப்பை ஆண்டு அனுபவிக்க மனிதனை உண்டாக்கினார்; அவனைத் தனது உருவசாயலாகப் படைத்தார்

மனிதன் கடவுளுடைய சாயல், அவருடைய ஆட்சியின் பிரதிநிதி. ஆயினும் அவன் சிருட்டி, படைத்தவனின் சொந்தப் பொருள். அவருக்கு நன்றி பிரமாணிக்கமுடன் அமைந்து நடந்து தகுதி அடைந்து கடவுளோடு வாழவேண்டியவன், அதற்கு ஒரு பரீட்சை கொடுத்தார்கடவுள், ''இவ்வின்பவனத்திலுள்ளஎல்லாவித மரங்களின் கனிகளையும் நீ உண்ணலாம்; ஆனால் நன்மைதின்மை அறியும் மரத்தின் கனியை உண்ணாதே. ஏனென்றால் அதை நீ உண்ணும்நாளிலேசாகவேசாவாய்'' என்று சொன்னார். (ஆதி. 2.16-17) இதுவே முதல் மனிதன் ஆதாமுக்குக் கிடைத்த கட்டளை.

இந்தமனிதனினின்றே பெண்ணும் பிள்ளைகளும் தோன்றினர். கடவுள் முன்னால் எல்லா மனிதரும் ஒன்று. அவருடைய திட்டப்படி நடப்பதுதான் அவர்களுடைய நிறைவு; கதியும் பாக்கியமும். கிடைத்த வாழ்வை நன்றியுடன் அவனுக்கு அர்ப்பணிப்பதாலே தன்னையும் அவனையும் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ளும் வசதி மனிதனுக்குக் கிடைத்தது. புத்தியாலறிந்து சித்தத்தால் தெரிந்து சக்தியாற் செய்யும் சிறப்பே கடவுளின் உருவமாயமைந்தது. அதோடு அவனுடைய குடும்பமும் ஆணில் வல்லமை பெண்ணில் ஞானம் மக்களில் அன்பு விளங்கவேண்டியிருந்தது. உண்மையை அறிந்து நன்மையைச் செய்வதால் இறைவனின் சாயலை வளர்த்து அவன் வாழ்விலே பங்குபெறுவது மனிதனின் கதியாயிருந்தது.

ஆனால்,

சிறப்பில் வாழ்ந்த<br>
மாதா பிதா—பகுத்<br>
தறிவைப் பாவிக்க மறந்ததால்<br>
பிறப்பில் பாவிகளாகி நாம்<br>
—இங்கு<br>
துறக்க வேதனைப்படுகிறோம்

ஆதாமின் மந்திரியான ஏவாள் நியாயபுத்தியைப் பாவிக்க மறந்தாள். தான் கடவுளின் பொருள், ஆதாமின் துணை என்பதை மறந்து தனிய உலாவப்போய் விலக்கப்பட்ட மரத்தருகே வேடிக்கை பார்த்துப் பாம்புடன் பேச்சிலிறங்கினாள். அது சுதந்திரமா? சரியானதை (நன்மையானதை) விரும்பி (தனதாக்கி)ச் செய்வதுதான் சுதந்திரம். யதேச்சையாய் நடப்பது மிருகத்திலும் கேடான, அலகை போன்ற மதிகேடு. சாத்தானுடன் சல்லாபித்து அனுப்புண்டாள். மனிதன் மிகச் சிறிய புத்தி. எனவே, அறிவு குறைவு. அதோடு மறதியோ நிறைவு என்பதை அவள் உணரவில்லை. ஆண்டவன் கட்டளை அவளுக்குத் தெரியும். அதைப் பாம்புக்கு அறிவித்தாள். பேயின் புத்திமதி சரியா என்று கணவனைக்கேட்கவில்லை, தன்னை நம்பினதால், பாம்பை நம்பினாள்; ஆண்டவன் கட்டளைக்கு அமையாது பழத்தைப் பிடுங்கித் தின்றாள்.

கணவனிடம் ஓடினாள். பேய் சொன்னதையும்தான் ஓதினாள். அவனும் பகுத்தறிவைப் பாவிக்க மறந்தான். கடவுள் வருவார் கேட்டுச் சாப்பிடலாம் என்று எண்ணவில்லை. அவளுடைய மாய்மாலத்திலே மயங்கினான் கனியை உண்டான். தன்னை உண்டாக்கிய கடவுளிலுமதிகம் தன் என்பு தசையான மனைவியை மதித்தான். இது அநீதி; கடவுளைக் கொல்ல முயற்சி. அதோடு கடவுட் தன்மையைத் தன் முயற்சியாலே கைப்பற்றத் திட்டம், இந்த மதிகேட்டால் ஆன்ம உயிரான கடவுள் தொடர்பைத் துண்டித்தான், தின்மையை அறிந்தான். தான் நிர்வாணியாயிருப்பதை உணர்ந்தான். இலைகளைத் தைத்து அற்றத்தை மூட முயன்றான்,

களவோடு நில்லாது பொய் சொல்லத் துணிந்தார்கள். குற்றத்தை உணராது, பொறுப்பை ஏற்காது சாட்டுச் சொல்லிப் பிறரிலே பழியைச் சுமத்தித் தவற எத்தனிப்பது பொய்தான். கடவுளை ஏமாற்ற, அவனுடைய திட்டத்தை மாற்ற முயலுவது மதிகேடு, தவறுக்குத் தண்டனை தானாக உண்டு. ஆன்மசாவு வந்தது. உடல் உள நோவு தொடர்ந்தது. உடலின் சாவு அதிலிருந்து விடுதலை; முடிவு ஒரு ஆறுதல் தான்.

(தொடரும்)

— அம்பி

# புதுவாழ்வின் மலர்களென....

சுழலுகின்ற உலகத்திலே—நிதம்<br>
உழலுகின்ற மனிதர் நாம்<br>
நிழலான விம்பங்களை—அசல்<br>
நிஜங்களென நம்புகின்றோம்.

பொன்னான வாழ்வதனை—தினம்<br>
மண்ணாக்கி வாழ்கின்றோம்.<br>
காலத்தைக் கழிக்கின்றோம்—அதன்<br>
காரணத்தைக் கண்டறியோம்.

வீணான காரியத்தை—தினம்<br>
விரைந்து நாமும் செய்வதனால்<br>
சீரான வாழ்வதனை—நிதம்<br>
சீர்கெடுத்து வாழுகின்றோம்.

மானிடத்தின் மாண்பதனை—எம்<br>
மனங்களிலே உணராமல்<br>
மதிகெட்ட எம் செய்கைகளால்—பலரை<br>
மதியிழக்கச் செய்கின்றோம்.

இலட்சியங்கள் இறப்பதில்லை—எமக்கு<br>
இலட்சியங்கள் இருப்பதில்லை<br>
எல்லாமே இன்பமயம்—இதன்<br>
எல்லைகள்தான் துன்பமயம்.

கரைந்துவிட்ட காலங்களை—இனி<br>
காண்பது கனவதில்தான்<br>
வரப்போகும் காலத்திற்கும்—எமக்கு<br>
வரையறைகள் தெளிவாயில்லை.

நிகழுகின்ற காலங்களே—எம்மை<br>
நிலைக்கச் செய்யும் காலமாகும்.<br>
எத்தனை நாள் வாழ்ந்தோமல்ல—அதில்<br>
என்ன செய்தோமென்பதே மேல்

பொன்னான வாழ்வதனை—எனவே<br>
என்னாளும் வளர்த்தெடுத்து<br>
புதுவாழ்வின் மலர்களென—நாம்<br>
எந்நாளும் திகழ்ந்திடுவோம்.

அ. பொள்சன், நவாலியூர்

# போதைப் பூக்கள்

**போதை வஸ்துப் பாவனையின் விபரீதங்களை விளக்கும் சித்திரம்**

'டிரிங்', 'டிரிங்' என வாசலில் மணி அடிக்கும் சப்தத்தைக் கேட்டு, இளந்த ஆரிசியை அப்படியே விட்டுவிட்டு வாசலுக்கு ஓடினள் மேரி. தபால்காரனிடமிருந்து காசுக்கட்டளையைப் பெற்றபின் தபால்காரன் காட்டிய இடத்தில் கையொப்பமிட்டாள். தபால்காரன் போய்விட்டான். கையில் தவழ்ந்த காசுக்கட்டளை அவள் மனதில் சந்தோஷ ரேகைகளைப் படரவிட்டது. மகன் அனுப்பும் பணம் கையில் கிடைப்பது ஒரு தாய்க்கு மிக மகிழ்ச்சியை அளிப்பது இயற்கைதானே. கண்களைக் காசுக்கட்டளையிலிருந்து அசற்றி பொலிவற்ற தன் வீட்டைப் பார்த்தாள். பெருமூச்சொன்று தான் அவளிடமிருந்து வெளிப்பட்டது. தனது கணவன் இறந்த பிறகு எப்படியோ கஷ்டப்பட்டு தனது இரண்டு மக்களையும் படிக்கவைத்தாள். மூத்தவன் கொழும்பில் வேலை செய்கிருன். இரண்டாமவன் உயர் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கிருன் மூத்த மகன் "கில்பேட்"டிடமிருந்து மாதாமாதம் பணம் தவருது வந்துகொண்டிருக்கிறது. தனியார் கம்பனி ஒன்றில் வேலை பார்க்கிருன், கிறிஸ்துமஸ், புதுவருட காலங்களிலேயே வீட்டிற்கு வருகிருன். தனக்கு சடிதம் போட வேண்டாமென்று கூறியிருக்கிருன். இளைய மகன் பள்ளிக்கூடத்திற்கு சென்றுவிடுகிருன். இவற்றை நினைத்துப் பார்த்தவாறே பெருமூச்சு விட்ட அவளைப் பருப்புக்கறி கருகும் மணம் மீண்டும் அடுப்படிப் பக்கம் விரையவைத்தது.

வீட்டினுள் காலடிச் சத்தம் கேட்டு அடுக்களையிலிருந்து எட்டிப்பார்த்த மேரி பள்ளிக்கூடத்திலிருந்து வழக்கத்திற்கும் விரைவாகவே வந்துவிட்ட ரூபனைக் கண்டாள். பின் வழமைபோல் தனது வேலைகளில் ஆழ்ந்தாள். சில நாட்களாக இவ்வாறே ரூபன் பள்ளிக்கூடத்திலிருந்து விரைவாக திரும்புகிருன். பணம் அதிகமாகக் கேட்கிருன். தன்னை அறையினுள்ளேயே அடைத்துக் கொள்கிருன். டியூசன் வகுப்புகளுக்கும் விசேட வகுப்புகளுக்குமாகச் செல்கிருன். வீட்டில் அவனைக் காண்பதே அரிது. அவனது நடத்தைகள் மாறியுள்ளதை மேரி அவதானித்தாள். அவன் சேர்ந்து திரியும் நண்பர் கூட்டம் அவன் தரத்திற்கு உயர்வானது. ஆனல் தவருன காரியங்கள் நடப்பதாக ஏதும் தெரியவில்லையே என்று மேரி எண்ணினள். அதனல் அவனைத் தொடர்ந்து விசாரிப்பதை விட்டுவிட்டாள். கஞ்சியை வடித்துக்கொண்டு நின்ற மேரி அடுக்களை வாசலில் நின்ற ரூபனைப் பார்த்தாள். அவளுக்கு அவன் காசிற்காக நிற்கிருன் என்று விளங்கியது. இருப்பினும் ஏதுமறியாதவள் போல்,

''தம்பி என்ன வேணும்? தேசிக்காய்த் தண்ணி கரைச்சுத் தரட்டா'' என்ருள்.

"அது ஒண்டும் வேண்டாம் அம்மா. நூறு ரூபா வேணும், டியூசனிற்குக் காசு கட்ட வேணும்.'' புத்தகமொன்றைப் பிரித்தவாறே பதில் சொன்ஞன் ரூபன்.

''தம்பி முந்தநாள் தானே நூறு ரூபா தந்தனுன்'' பெட்டிக்குள் இருந்த தேசிக்காயை எடுத்தவாறே பதிலளித்தாள் மேரி.

## சிறுகதை

''அது வேற டியூசனிற்கம்மா'' என்ருன் அவன்.

தற்போது பாடசாலைகளில் படிப்பிப்பது குறைவென்றும், டியூசன் வகுப்புகளிலேயே மிக அதிகமாகப் படிப்பிக்கிருர்கள் என்றும் அயல் பெண்களிடமிருந்தும், வேறு சிலரிடமிருந்தும் மேரி அறிந்திருந்தாள். கரைத்துமுடித்த தேசிக்காய் தண்ணீரைக் கிளாஸில் ஊற்றி ரூபனிடம் கொடுத்துவிட்டு அடுக்களையை விட்டு வெளியேறினள். ரூபன் தேசிக்காய் தண்ணீரை குடித்துவிட்டு நிமிர்ந்தபோது நூறுரூபாய் தாளுடன் தாய் நிற்பதைக் கண்டான். அவன் முகம் மலர்ந்தது. தாய் தந்த காசை வாங்கியவாறே அடுக்களையிலிருந்து வெளியே ஓடினன். சைக்கிளை எடுத்தவாறே வீட்டுக் கேற்றைத் திறந்தான் வீட்டுக்கு வெளியே நின்ற தன் நண்பர்களைப் பார்த்து ''கெதியாய் சைக்கிளை மிதியுங்கோ'' என்ருன்.

அதேவேளை, கொழும்பில், அறையில் கட்டிலில் படுத்திருந்த கில்பேட் கதவைத் தட்டும் சத்தம் கேட்டு எழுந்திருந்தான். ஜன்னலினல் எட்டிப் பார்த்தான். வாசலில் ஜெயக்கொடி நிற்பது தெரிந்தது. கதவைத் திறந்ததும். ஜெயக்கொடி உள்ளே நுழைந்ததும் கதவைச் சாத்தினன். ஜன்னலை அணுகி திரைச்சீலையை ஒரு அங்குலம் நகர்த்தி வெளியே தெருவைப் பார்த்தான். பின் திரைச்சீலையை மூடிவிட்டு கில்பேட்டை அணுகினன். அவனைத் தன் அருகிலே இருக்குமாறு கூறினன். ''கில்பேட் இனி நாம் தப்பிறது ரொம்பச் சிரமம். பரவலாய் வலை விரிச்சிட்டாங்கள். உன்னிடமிருக்கிற சரக்கை நான் எப்படியும் இன்று இரவிற்கிடையிலே இளப்பிடறேன். நீ எப்படியும் தப்பி யாழ்ப்பாணத்திற்கு போயிடு'' என்றவாறே மீண்டும் ஜன்னலினல் பார்த்தான். ஜெயக்கொடி அங்கிருந்து வெளியே பார்த்தவாறே,

"கில்பேட் சி. ஐ. டி. கூட என்னை தொடர்கிருன். ஆனல் உன்னை அறிஞ்சிருக்கமாட்டான், விரைவாகக் கிளம்பு'' என்றவாறே காற்சட்டைப் பையிலிருந்து ஒரு கட்டுப் பணத்தைஎடுத்து கில்பேட்டை நோக்கி வீசினன். கில்பேட்டிற்கு உடலெல்லாம் வியர்க்கத் தொடங்கியது. இனி எவ்வாறு பணம் சம்பாதிப்பது என்று எண்ணத் தொடங்கினன். வீட்டில், தனியார் கம்பனி ஒன்றில் உயர்ந்த பதவியில் வேலையிலிருப்பதாகப் பொய் கூறியது அவனைக் கலங்கவைத்தது. வீட்டில்போய் இனி என்ன கூறுவது? கில்பேட் கொழும்பில் வேலைதேடித் திரிந்தபோது குறைவான உழைப்புடன் கூடிய பணம் தரக்கூடிய வேலையாக கிடைத்தது ''போதை மருந்து'' விற்பனைதான். ஊருக்குத் திரும்பினல் குடும்பத்தை கவனிப்பது யார் என்ற எண்ணம் அவனை உலுக்கியது. ஆனல் இனியும் கொழும்பில் இருக்கமுடியாது. எப்படியும் தன்னையும் பிடிப்பார்கள் என்ற பயம் அவனைக் கவ்வ ஜெயக்கொடியைப் பார்த்து,

''நான் யாழ்ப்பாணம்போய் என்ன செய்யுறது? என் குடும்பத்தைக் கவனிக்க எனக்கு இன்னும் பணம் வேணும்'' என்ருன்.

ஜன்னல் வழியாகத் தெருவைப் பார்த்துக்கொண்டு நின்ற ஜெயக்கொடி திரும்பினன்.

— யாழ். சங்கர் —

''கில்பேட் இப்ப யாழ்ப்பாணத்திலே ஹெராயினுக்கு கிராக்கி அதிகம். முன்னைய மாதிரி இப்ப மரணதண்டனை போன்ற கெடுபிடிகள் வலு குறைவு. இளைஞர்கள் குறிப்பாக மாணவர் மத்தியில் இதை உபயோகிப்பது வெகு வேகமாய்ப் பரவி வருது. ஆனல் அங்க ஹெராயினை விநியோகிக்கிறதுக்கு ஆட்கள் குறைவு. நீ யாழ்ப்பாணத்திலே போய் நாங்கள் அனுப்புற சரக்குகளை விநியோகி. இதைவிடப் பணம் உனக்கு அதிகம் கிடைக்கும் என்று கூறியவாறே, அறையினுள் கிடந்த கில்பேட்டின் பொருட்களை கில்பேட்டிற்கு உதவியாகப் பையினுள் அடைக்கத் தொடங்கினன்.

சைக்கிள்கள் சிறிய ஒழுங்கை ஒன்றை அணுகி விரைவாக அவ்வொழுங்கையினுள் நுழைந்தன. ஒரு சிறிய குடிசையை அண்மித்ததும் சைக்கிள்கள் அனைத்தும் நின்றன. ரூபனின் மனம் வேகமாக அடித்துக் கொள்ளத்தொடங்கியது. இது அவனுக்கு புது அனுபவம் அல்ல. ஆயினும், அவனது கை, கால்கள் வியர்வையால் நனையத் தொடங்கின. கைகள் நடுங்க ஆரம்பித்தன. நாவறண்டது. போதை வேண்டும் என்ற வெறி அதிகமாகியது. குடிசை வாசலைத் திறந்து நண்பர்கள் பின்தொடர உள்ளே நுழைந்தான். குடிசையினுள் இருந்தவர்கள் ரூபனிடமும், அவன் நண்பர்களிடமுமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டபின், சிறிய பொலீத்தின் பைகளில் அடைக்கப்பட்ட சற்றுப் பழுத்த வெண் தூளை அவர்களுக்குக் கொடுத்தனர். குடிசையை விட்டு வெளியே வந்த ரூபனும், நண்பர்களும் சைக்கிள்களை மிதிக்கத்தொடங்கினுர்கள். சில நிமிடங்களின் பின் அவர்கள் பிரியும் சந்தி வந்தது. ரூபன் நண்பர்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டான். இப்போது அவன் கை, கால் நடுக்கம் அதிகரித்து இருந்தது. அவன் போதை விருப்பு மேலும் மேலும் அதிகரிக்கவே சைக்கிளை நிறுத்தி ஹெராயின் பக்கட்டை எடுத்து உடைத்து வாயினுள் போட்டுவிட்டு சைக்கிளை மிதிக்கத் தொடங்கினன். சிறிது நேரத்தின்பின் அவன் கை, கால் நடுக்கம் அற்றுப்போனது. கண்ணிலிருந்து வீட்டுக்காட்சிகள் மறைந்து புதிய காட்சிகள் உதயமாயின. தன உடல் மிகவும் லேசாகி காற்றில் பறப்பதுபோல் உணரத் தொடங்கினன். உற்சாகமுள்ள மயக்க நிலையில் தடுமாற்றமாகவும், விரைவாகவும் சைக்கிளை மிதித்தான். ஹெராயினின் போதைக்கு அவன் முற்றிலும் ஆட்பட்டிருந்தான். தனது அறையிலேயே வழக்கமாக அவன் போதை மருந்துகளை உபயோகிப்பான். தாயிடமிருந்து தப்பிப்பதற்காக அறையை எந்நேரமும் சுத்தமாக வைத்திருப்பான். இன்று போதைவிருப்பின் ஆவலினல் வீதியில் ஹெராயினை உட்கொண்டிருந்தான். வீதியில் எதுவுமே அவனுக்கு தெரியாமல் போக எதிரேவந்த மினிபஸ் ஒன்றுடன் மோதி தூக்கி எறியப்பட்டான். கீழே விழுந்து தலையில் பலமாக அடிபட்டபோது மட்டும் ''அம்மா'' என்று முனகினன். அதிகமாக ரத்தம் இழந்தான், வைத்தியசாலைக்கு மனித நேயமுள்ள சிலரால் எடுத்துசெல்லப்பட்டான்

கில்பேட் கொழும்பு பஸ்ஸிலிருந்து இறங்கி ஆட்டோ ஒன்றைபபிடித்து வீட்டை அடைந்தபோது வீடு வெறிச்சோடி இருப்பது வாசலிலேயே தெரிந்தது. கேட் அருகே சென்று பார்த்தான், கேட் பூட்டியிருந்தது. வெளியே நடந்துவந்தான். பக்கத்து வீட்டை அணுகிக் கதவைத் தட்டினன். கதவு திறந்தது. அன்ரனி மாமாவின் கண்ணுடி போட்ட முகம் இவனைக் கண்டதும் வரவேற்றது. பின் வியப்பைக் காட்டியது.

''அடே தம்பி கில்பேட், ரூபன் அடிபட்டு ஆஸ்பத்திரியில் இருக்கிருன். உனக்கு விஷயம் தெரியாதோ'' என்ருர். நடந்ததைக் கேட்க கோபம் பற்றிக்கொண்டுவந்தது. அதனை அடக்கிக்கொண்டு, ''எத்தனையாம் வாட்டில'' எனக் கேட்டுக்கொண்டு அதைத் தெரிந்தபின் கிடைத்த ஓர் வாகனத்தில் ஏறி ஆஸ்பத்திரியை அடைந்தான்.

ஆஸ்பத்திரினுள் நுழைந்து வாட்டினுள் எட்டிப்பார்த்தபோது அம்மா கட்டிலின் அருகே இருந்து அழுவதுதெரிந்தது. அக்கட்டிலை நோக்கி நடந்தான். காலடிச் சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்த மேரி இவனைக் கண்டதும் கட்டிப்பிடித்து அழத் தொடங்கினள். அவளை அமைதிப்படுத்த கில்பேட் பெரிதும் சிரமப்பட்டான். அமைதிப்படுத்தியபின் தாயிடமிருந்து விபரத்தைக் கேட்கலானன். தாய் சொன்ன விபரங்கள் அவனை இடிந்துபோய் உட்கார வைத்தன. தன் தம்பியின் இந்நிலைக்குத் தானும் ஓர் காரணம் என்னும் உணர்வு அவனை வதைத்தது. தன் தம்பியைப்போல் எத்தனை பேரின் வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கும், எத்தனை குடும்பங்கள் தன்னல் சீரழிந்திருக்கும் என அவன் மனச்சாட்சி அவனை உறுத்தத் தொடங்கியது. தாயை மெதுவாக அழைத்தான்.

"அம்மா அன்ரனி மாமா கடையை நடத்தக் கஷ்டப்படுகிருர். நான் ஒவ்வொருமுறையும் கொழும்பில் இருந்துவரும்போது அவதானித்தேன். அவரட்டைக் கேட்டு கடையை எனக்கு எடுத்துத் தாருங்கோ. இனி நான் கொழும்பிற்குப் போகமாட்டன். அதைப்பற்றி விபரமாகப் பிறகு சொல்லுறன். அம்மா மாதா கோவிலில் இப்போ குருவானவர் இருப்பாராஎன்ருன். தாயின்கண்கள் மகனை ஆச்சரியத்துடன் நோக்கின. கோவில் பக்கமே திரும்பிப்பாராத தனது மகனின் இக்கேள்வி அத்துன்ப நிலையிலும் அவளை மகிழ்விக்கவே—

"ஓம் இருப்பார். ஏனடா தம்பி?" என்ருள் மேரி. கில்பேட் மௌனமாக ஆஸ்பத்திரியை விட்டு அகன்ருன். மாதாகோவிலில் அவன் பாவ மன்னிப்புபெறுவதற்காகஅணுகியபோது கோவில் மணி அவனை வரவேற்கும் முகமாக ஒலிக்கத் தொடங்கியது.

---

வாழ்வுதரும் இறைவாக்கு

"உயர்ந்ததும்,
பரிசுத்தமுமான இடமே
நம் உறைவிடம். ஆனல்,
பாவத்துக்காக வருந்தும்
தாழ்ச்சி நிறைந்த
உள்ளத்தினரோடும்
நாம் குடிகொண்டிருக்கிறேம்.
கடைசிவரையில் நாம்
கோபமாயிருக்க மாட்டோம்."

இசை. 57 : 15

இறைவாக்கு வாழ்வுதரும்

# விடிவெள்ளி ஒளியிழந்தால்....

மனித நாகரீகப் படிகளில் மக்கள் முன்னேறும் போது ஒழுக்க வாழ்வும் நேர்மையும் அருகத் தொடங்குகின்றன. இதனுல் சரியான பாதையைக் காட்டவும், உண்மையை எடுத்தியம்பவும் சமூகத்தில் இருந்து பல தலைவர்கள் உருவாகின்றனர். இவர்கள் பிரச்சினைகள், சிக்கல்கள் நிறைந்த காலத்தில் கலங்கரை விளக்கமாக நின்று மக்களின் வாழ்க்கைப் படகு உரிய கரையை அடைய வழி காட்டுகின்றனர். இவ்வாருன வழி காட்டும் பல கைகளும், கலங்கரை விளக்கங்களும் வழி தவறும் போது நிலைமை தர்ம சங்கடமாகின்றது.

இன்றைய நம் சமூகங்களில் பிழையான தலைமைத்துவத்திஞல் இளைஞர்கள் அலைக்கழிக்கப்படுகின்றனர். தலைவர்கள் தமது சுய கொள்கைகளையும் கோட்பாடுகளையும் மற்றவர்களும் பின்பற்ற வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். வழி காட்ட வேண்டியவர்கள் வழி தவறும் போது வழிநடத்தப் படுபவர்கள் தமது வாழ்வில் உண்மையை அரிய முடியாது தவருன வழியில் செல்ல முயல்வர். இதனல் சமூகத்தின் அடி அத்திவாரமான இளைஞர்கள் தவருன வழி முறைகளை நாடுவ்து தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

''தலைமை ஏற்போர், ஆட்சி புரிவோர், அதிகாரம் தாங்குவோர்'' ஆகிய அனைவரும் தம்மை ஏனையோர் பினபற்றி வாழ முயல்கினறனர் எனபதை உணரவேண்டும் அவர்கள் பிளவுகளை வளர்க்கும் பித்தர்களாகவோ வாய்மையை மறைக்கும் பொய்யர்களாகவோ, நிதியை நீக்கும் நீசத்தனம் கொண்டவர்களாகவோ மாறும் போது, வழி நடத்தப்படுபவர்கள் பிளவுகளையும், பொய்மைகளையும், அநீதிகளையும் ஆதரிக்கும் அவலட்சணமான நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

தூரத்த தெரியும் அதிகாலை, விடிவெள்ளியினுல் அறியப்படுகின்றது. வானம் என்னும் இந்தப்பரந்த உலகில் விடிவெள்ளிகளான தலைவர்கள் ஒளியிழக்கக கூடாது. ''மூத்தோர் சொல் வார்தகை அமிர்தம்'' எனப் புகழும் தமிழுலகம் பாரதியின் உள்ளக்கிடக்கைகளையும் நினைக்கவேண்டும்.

''நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறனும் இன்றி
வஞ்சனைசொல்வாரடி -கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடி''

எனவே போலியான தலைமைத்துவங்களை இனங்கண்டு தூக்கி வீச,

எம்மையே அளிப்போம்
எம்மையே அழிப்போம்.

''தமிழ் நேசன்''
புனித மாட்டீன் குருமடம்
யாழ்ப்பாணம்.

---




இளைஞர் உலகம்
அ. ம. தி. குருமடம்,
கொழும்புத்துறை,
3-06-88

அன்பு இளம் உள்ளங்களே,

''விதம் விதமாய் துணிகள்
இருக்கு
விலையைக் கேட்டா நடுக்சம்
வருது
வகை வகையா நகைகள்
இருக்கு
மடியைப் பார்த்தா மயக்சம்
வருது
எதை எதையோ வாங்கணு
மின்னு
எண்ணமிருக்கு வழியில்லே—
இதை
எண்ணுமலிருக்கவும் முடி
யல்லே''

— என்கின்ருர் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

எண்ணில்லாத் தேவைகள் மனித வாழ்க்கையில் எழுவது இயல்பே. இது தொடர்பாக எழும் ஏக்கங்கள், தேவைகள் நிறைவு செய்யப்படாததால் ஏற்படும் தாக்கங்கள் எளிதானவை அல்ல. எனினும், அன்பு நெஞ்சங்களே, அவசரப்பட்டு தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டு விடாதீர்கள். பிரச்சனைகளை நேருக்கு நேர் எதிகொள்ளாது தளர்வுற்று விடாதீர்கள். ஏக்கங்களாலும் தாக்கங்களாலும் அல்லல்பட்டாலும் அவற்றிலிருந்து விடுதலை பெறும்வழி தப்பி ஓடுவதில் அல்ல; மாருக அவற்றை எதிர்கொண்டு எதிர்நீச்சல் போடுவதிலேயே தங்கியுள்ளது. அவற்றை முறியடிக்கும் திறன் உங்களிடம் நிச்சயமாக உள்ளது. எனவே,

துயரினை மறக்கத் துணிந்து நில்லுங்கள்;
இடரினை வெல்ல எழுந்து செல்லுங்கள்.
நல்வாழ்த்துக்களுடன்.

அன்பு நெஞ்சன் வி. பி.

---

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு–21

அடைக்கலம்:- அகதியாய் ஒதுங்கேக்க இருந்த ஒற்றுமை இப்ப அருகி வருகுது, பாத்தியா அண்ணை?

குருசுமுந்தண்ணை:- அப்படி என்ன புதிசாத் தம்பி நடக்குது?

அடைக்கலம்:- இப்ப காசுகள் வந்ததும், பெரிசு, சிறிசு எண்டும் பேரம் பேசி குலம் கோத்திரத்தை இழுத்து கதைக்கிறதிலையும் தொடங்கிற்று பாத்தியாண்ணே.

குருசு: அப்ப தம்பி அடியைப் போல அண்ணன் தம்பி உதவாது தான் போல. இதால தானே அமைதியும் இல்லாம அலையிறம். எல்லாம் ஆறு கடக்கும் வரைக்கும் தான். அண்ணனும் தம்பியும் எண்டநிலைதான் போல. செல்லுக்கு தப்பினுலும் இந்த சொல்லுக்கு தப்பிறதெப்பவோ... அப்பதான் அமைதிவரும் தம்பி.

---

## மணிக்கதைப் போட்டி

விதிகள் :

1. இளைஞர்களுக்குப் புத்துணர்வினை ஊட்டக்கூடிய கருத்துக்களைக் கொண்டது.
2. வெள்ளைத் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்படல் வேண்டும்.
3. 750 — 1000 சொற்கள்.
4. ஆடி 15க்கு முன்னர் 'இளைஞர் உலகம்' முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

1ம் பரிசு : ரூ. 250/- — அளிப்பவர்: மணியோசை, யாழ்ப்பாணம்.

2ம் பரிசு : ரூ. 150/- — அளிப்பவர் : சில்வின்ரோஸ், யாழ்ப்பாணம்.

3ம் பரிசு : ரூ. 100/- — அளிப்பவர் : செந்தில் ஸ்பொட், நாவாந்துறை.

---

ஊக்குவியுங்கள்

## வாசகர்களே,

பாதுகாவலன் பத்திரிகையை உங்கள் நண்பர்களுக்கு அறிமுகப் படுத்துங்கள். ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்.'' நீங்கள் அறிமுகப் படுத்தாமல் எப்படி மற்றவர்கள் அறியமுடியும். மறைவட்டத்திலுள்ள அனைத்துக் கத்தோலிக்க குடும்பங்களும் வாரம் தவருது பாதுகாவலன் வாசிக்கப் பழகிக்கொள்ள நீங்களே துணைபுரிய வேண்டும்.

ஆ–ர்.

---




### கணவன் மனைவி இருவருக்கும் சில அறிவுரைகள்

(சென்ற இதழ் தொடர்)

குற்றங்குறைகளைத் திருத்தும்போது ஒரு சில வார்த்தைகள் மட்டும் கூறுங்கள். தொடர்பற்ற கதைகளைக் கொண்டு பிரச்சனைகளைப் பெரிது படுத்தவேண்டாம். பிழைகளைப் பொறுமையோடு ஏற்றுத் திருத்திக் கொள்ளுங்கள்.

வீட்டிற்குள் நடக்கும் பிரச்சனைகளை வெளிக்கொணர வேண்டாம். உங்கள் பிரச்சனைகள் உங்களுக்குள்ளேயே இருக்கட்டும். சண்டையென்ருலும் மாமன் மாமி மைத்துனர்களைத் தொடர்புபடுத்தவேண்டாம். இதற்காக உங்கள் பெற்ருேர் உறவினரையும் அழைக்க வேண்டாம்.

ஒருவரையொருவர் உள்ளன்புடன் நேசியுங்கள். சிறுபிரச்சனைகள் மூலம் பிரிந்து செல்லவேண்டாம். குடும்பச் சுமையை இருவரும் ஏற்றுக் கொள்ளுங்கள்.

ஒருவருக்கொருவர் துணையாய் இருங்கள். துரோகம் செய்யவேண்டாம். சோதனைகளுக்கு இடம் கொடுக்காதீர்கள். பெண்கள் அச்சம், நாணம், அடக்கம், மரியாதை போன்ற குணங்களைக் கொண்டிருங்கள். கணவன் பிழையான நடத்தைக்கு இடம் கொடுக்க வேண்டாம்.

நடத்தை மட்டில் சந்தேகம் ஏற்படின் பிறருக்கு அறிவிக்க வேண்டாம். உண்மையை அறிந்து சரியான பாதையைப் பின்பற்றுங்கள். இல்லையேல் பிரச்சனைகள் ஏற்படக்கூடும்.

கிறிஸ்தவ கடமைகளைப் பிரமாணிக்கத்துடன் நிறைவேற்றுங்கள். குடும்பச்செபத்தில் இருவரும் கலந்து கொள்ளுங்கள். திருஇருதய சுரூபத்தை அல்லதுபடத்தை ஸ்தாபகம்செய்து வையுங்கள். உங்கள் குடும்பத்தலைவராக கிறிஸ்துவை ஏற்று நாள்தோறும் உங்கள் குடும்பத்தை ஒப்புக்கொடுங்கள்.

---

# என் நண்பரைத் தேடுகிறேன்

உலக மேடையில் நடக்கும் வாழ்க்கை நாடகம்! அதில் ஏற்படும் புதிர்களுக்கு சில 'திருப்பங்கள்' விடை சொல்வதுண்டு.

நான் வசந்தத்தை மட்டுமே சுவைத்து வந்த காலம் ஒன்றுண்டு. அப்போது எனது ராஜாங்கத்தில் என்றும் வளமை தான்! உயர்ந்த மாளிகை! குவிந்த செல்வம்! நிறைந்த உறவுகள்! என்னை வட்டமிட்ட நணபர்களின் எண்ணிக்கையோ ஒரு 'வளர்பிறை' யாயிருந்தது. நண்பர்களா அவர்கள்... இல்லை...இல்லை என் செல்வச் செழிப்புக்காகவே, என் காலணிகளுக்கும் சாமரம் வீசத் தயங்காத சேவகர்கள்! எனது ஒவ்வொரு அசைவிற்கும் ஆயிரமாயிரம் காவியங்கள் படைத்த சோற்றுக் கவிஞர்கள் நான் மிதித்தது சகதியே என்ருலும் அது சந்தனமே என்று சத்தியம் செய்த போலிகள்! என் மாளிகையின் உச்சியில் நின்று வானத்து நட்சத்திரங்களை மட்டுமே காட்டி, கீழே ஓடும் சாக்கடையை நோக்கும் என் கணகளுக்குத் திரை போட்டவர்கள்! இந்த செல்வ மலரைச் சுற்றி அந்த 'நட்பு வண்டுகள்' இசைத்த ரீங்காரமெல்லாம் தேனருந்தத் தான் என்பது இந்த பேதை நெஞ்சத்திற்கு புலப்படவில்லை. அந்த சந்தர்ப்பவாதிகள் பூசியிருந்த அதிகாரம் அது இந்த அப்பாவியின் கண்களுக்கு அகப்படவில்லை. ஆனுலும் இந்த உண்மைகள் புலர்ந்த காலம் ஒன்று வந்தது.

ஆம், காலமகள் தன் கை வரிசையைக் காட்டிவிட்டது. இந்த ராஜ யானைக்கும் அடி சறுக்கிவிட்டது. கோபுரத்திலிருந்து குப்பை மேட்டிற்கு வீழ்த்தப்பட்டேன். அதுதான் இன்றைய நிகழ்காலம்! இப்போது என் பெயர் பிச்சைக்காரன். உயர்ந்து நிமிர்ந்த அந்த ஆலமரம் தான் எனது உணவுக் களஞ்சியம்! என் காலடி பதியாத 'வீட்டுவாசல்' இங்கே இல்லை. 'அம்மா தாயே, என்ற என் குரல் கேட்காத செவிகளும் இல்லை.

ஆனுல்...அந்த நண்பர்கள்...அவ்வப்போதுவந்து முதலைக் கண்ணீர் வடிப்பார்கள்! அது உணர்வை நனைத்ததில்லை! 'ஐயோ பாவம்' என்ற வார்த்தைகள் என் செவிகளைக் கடந்து உள்ளே போனதில்லை. செஞ்சோற்றுக் கடன் தீர்க்க சிலர் சில்லறைகளை அள்ளிப் போடுவார்கள்! அவை என்னைப் பார்த்து சிரிக்கும்! நான் போட்ட பிச்சையின் சில துளிகள் என்னிடமே வந்து விட்டதல்லவா?

(தொடரும்)

# அருள்வாக்கு அறிவோம்

திருமறைப்பணி நிலையம்
த. பெ இல. 2,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

**ஞான இலக்கிய நூல்கள் (17)**

## ஞானாகமம்

**இறையியற் கருத்துக்கள்.**

1. இறைவன் இருக்கின்றாரா? அவன் எங்கே வாழ்கின்றான்? என்ற நவீன காலத்துக் கேள்விகளுக்கு ஞானாகமம் பதில் கூறுகின்றது. இறைவன் யார் என்பதற்கு நாம் காணும் படைப்புக்களே பதில் கூறும். படைப்பின் அழகு. ஆற்றலிலிருந்து படைத்தவரைக் கண்டுணரலாம். உலகைப் படைத்துக் காக்கும் இறைவன் இவ்வுலகத்திற்கு அப்பாற்பட்டவர். (11: 22) வாழ்வு, சாவு. ஆற்றல்கள் அனைத்தும் அவரைச் சார்ந்துள்ளன. (6: 1—11) பெரியவை, சிறியவை, வலுவற்றவை, ஆற்றலுள்ளவை யாவும் அவரது பராமரிப்பின் கீழ் செயலாற்றுகின்றன.

2. இறைவன் அளவில்லா ஞானமுடையவர். (1: 20) எல்லாவற்றையும் நீதியோடு நடத்துகிறார். பாவிகள் மனந்திரும்பித் தம்மிடம் திரும்பிவரப் பொறுமையோடு காத்திருக்கிறார். (9: 1, 11: 2) அவரது தண்டனை நோயைக் குணமாக்கும் மருந்தினைப்போன்றது. இதை ஒருவன் தன் வாழ்வில் உணரும்போது அவன் இறைவனைப் பற்றிய அறிவையும் அனுபவத்தையும் கூடுதலாக அடைவான்.

3. ஞானம் இறைவனுக்கும் மனிதனுக்கும் சொந்தமானது. ஞானத்தின் செயல் மனிதனில் நிறைவு பெறுகிறது. ஞானம் மனிதர்களுக்குக் கற்பிக்கிறது. (8: 7; 9: 10) அவர்களை வழிநடத்துகிறது தனது இறைத் தன்மைக்கேற்ப இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே பாலம் அமைக்கிறது. பாவமானது இந்த ஞானத்தைப் பெறுவதற்கு பெரும் முட்டுக்கட்டையாக இருக்கின்றது. ஞானம் எல்லாப் புண்ணியங்களுக்கும் அடிப்படையாகவும், பாதுகாப்பாகவும் அமைகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக சாகாமைக்கும், அழியாமைக்கும் இட்டுச் செல்கின்றது.

எஸ். இயூஜின் பிரான்சிஸ்

## பைபிள் கதை

**வணக்கம் பிள்ளைகளே!**

லோத்தின் குடும்பம் நல்லவர்கள் என்றே, அவர்களை இவர்களோடு சேர்த்து அழிக்கலாமா? அது இறைவனின் நீதியாகாதே! ஆகவே இறைவன் ஒரு திட்டம் தீட்டினார் அவர்களை எப்படியும் காப்பாற்றியாக வேண்டும் என்றெண்ணி தன் தூதர்களை இவர்களிடம் அனுப்புகிறார்

பொழுது விடியும் வேளையிலே ஆண்டவரின் தூதர்கள் லோத்தை அவசரப்படுத்தி "நீ எழுந்திரு, உன் மனைவியையும் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு, உடனடியாக இந்த நாட்டை விட்டு வெளியேறு. இடைவழியில் எங்கும் தங்கிவிடாதே, நாட்டின் அழிவிலே நீ அகப்படாதபடி ஓடோடிப்போய் அந்த மலையிலே ஒதுங்கிக்கொள்" என்றார்கள்.

லோத் என்பவரோ வயது சென்றவர். மலையில் ஏற சக்தியில்லை எனவே தூதரிடம் கேட்கிறார் "ஐயா ஒரு வார்த்தை கேளும்! என்மேல் நீர் அளவில்லாத அன்பு கொண்டீர் என்பதை உணருகிறேன்! நான் வயது போனவன். மலைக்கு ஓடிப்போக என்னால் முடியாதப்பா! அங்கே போனால் நான் செத்துப் போவேன்! அதைவிட்டு எதிரே உள்ள சிறிய ஊருக்கு ஓடிப் போகட்டுமா? அங்கே போனால் என்னைக் காப்பாற்றுவீர்களா?" என்று கெஞ்சுகின்றார்

அவர்களும் இவரின் வேண்டுகோளை ஏற்று 'சரி' என்று ஆமோதிக்கின்றனர். இதே வேளையிலே இவருக்கு ஒரு நிபந்தனை போடுகிறார்கள் "நீங்கள் போவது சரி! போகிற வழியிலே நாட்டின் மீது நாம் நெருப்பு மழை பொழிவோம்! ஆனால் யாரும் திரும்பிப் பார்க்கக்கூடாது" என்று கூறி அனுப்பி வைக்கிறார்கள்.

நாட்டின் எல்லையை இவர்கள் தாண்டும்போது அதிகாலை அப்பொழுது வானத்திலிருந்து நெருப்பும்-கெந்தகமும் மழையாகப் பொழிந்தன! நாடு முழுவதும் ஐய்யோ முறையோ என்று ஓலம்! சனங்கள் எல்லாம் நெருப்பிலே பொசுங்கிக் கருகினார்கள்.

இந்தக் கூக்குரலைக் கேட்ட லோத்தின் மனைவி-திரும்பிப் பார்த்தாள்! "திரும்பிப் பார்க்காதே" என்ற ஆண்டவரின் சொல்லை மீறின படியால் உடனே அவள் உப்புச் சிலையாக மாறிவிட்டாள்.

பார்த்தீர்களா பிள்ளைகளே! நல்லவர்கள் என்று தேர்ந் தேர்ந்தெடுத்த நாலுபேரிலும் ஒருத்தி தவறு செய்துவிட்டாளே. இப்படித்தான் நம்ம குடும்பங்களிலும் ஓர் இருவர் இருக்கத்தான் செய்கிறார்கள். மிகுதிக் கதை அடுத்தவாரம்.

எஸ். ஏ. நாதர்

அறிந்து கொள்ளுங்கள் 38

## இருக்கிறவர் நாமே

எரியும் முட்செடியில் இருந்து மோயீசனை அழைத்த இறைவனிடம் மோயீசன் "இதோ நான் இஸ்ராயேல்மக்களிடம்போய் உங்கள் முன்னோரின் கடவுள் என்னை உங்களிடம் அனுப்பினார் என்று நான் சொல்லும்போது. அவர்கள் அவருடைய பெயர் என்ன என்று என்னைக் கேட்டால் நான் அவர்களுக்கு என்ன பதில் சொல்வேன்" என்று கேட்க, கடவுள் மோயீசனை நோக்கி "இருக்கிறவர் நாமே" நீ இஸ்ராயேல் மக்களிடம் போய் இருக்கிறவரே என்னை உங்களிடம அனுப்பினார் என்று சொல்வாய் என்றார் (யாத் 3 : 13 - 14)

இருக்கிறவர் நாமே என்ற சொல் கடவுள் படைக்கப்படாத பரம்பொருள் என்ற உண்மையை நமக்கு விளக்குகிறது அவர் தன்னாலே வாழ்பவர், எல்லா உயிரையும் வாழ்விப்பவர் என்றும் சிலர் விளக்கம் கூறுவர்.

வேறு சிலரின் விளக்கப்படி இறைவன் தம்பெயரை வெளியிட மறுப்பதாகத் தோன்றுகின்றது. "இருக்கிறவர் நாமே" என்பதற்கு கடவுளின் பெயரோ தன்மையோ சொல்லமுடியாது, கற்பனைக்கு எட்டாது, எமது சிறிய அறிவால் புரிய முடியாது என்பதை மோயீசனுக்கு கூறுகிறார் என்று விளக்கம் கொடுக்கிறார்கள்.

"இருக்கிறவர் நாமே" என்ற வார்த்தைக்கு புலனறிவிற்கேற்ப விளக்கம்கூறுகின்றனர் வேறு சிலர். "என்றும் நாம் உன்னோடு இருப்போம்" அதாவது, என்றும் நம்மோடு இருப்பவர். கடவுள் மோயீசனோடு இருந்தபடியால் தான் மோயீசன் எகிப்தில் பல வியப்புக்குரிய செயல்களை செய்யக்கூடியதாக இருந்தது. செங்கடலைக் கடந்தபோது இறைவன் மோயீசனுக்குக் கட்டளையிடுகிறார் "நீ உன்கோலை ஓங்கி உன்கையை கடலின் மேல் நீட்டு."

செங்கடல் இரண்டாகப் பிரிந்து வழிவிடுகின்றது. இறைவன் மோயீசனோடு இருந்தபடியால்தான் இவ்வாறு நிகழ்ந்தது இவ்வாறு பல்வேறு சூழ்நிலைகளிலே மோயீசன் ஆற்றிய அருஞ்செயல்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

மற்றும் சிலர் "இருக்கிறவர் நாமே" என்பதை இறைவனின் உள்ளியல்பும் அவர் வாழும் தன்மையும் இணைந்திருப்பதையே இச்சொல் நமக்கு புலப்படுத்துகிறது என்பர்.

இஸ்ராயேல் மக்கள் இறைவன் தங்களோடு இருந்து செயல்பட்டார். தங்களை மீட்டார் என்று புரிந்து கொண்டனர். அவர்களைப் போலவே நாமும் இறைவன் நம்மோடு என்றும் இருக்கிறார் என்று கூறுகின்றோம்.


இ. ம. ஜெயசீலன்.

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 2<br>சுடர்: 12 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |

### தாவீதடிகள் பரிசுத்திட்டம்

**சிலுவைப் புதிர்: 1.**



(1) குறுக்கு மரம்: 3 எழுத்துச் சொல்.

(2) நடுமரம்: 5 எழுத்துச் சொல்.

கவனமாக வாசியுங்கள்:

கிறிஸ்தவன் அறிய வேண்டிய அடிப்படையான உண்மைகளும் ஒழுங்குகளும்.

1) நாம் இரட்சிக்கப்பட வேண்டுமாயின் நம்மை உண்டாக்கிய இறைத் தந்தையை அறிந்து அவரை அன்பு செய்து தொழ வேண்டியது. விசுவாசத்தால் அவரை அறிகிறோம் அவர் நமக்கு மோட்சம் தருவாரென்ற நம்பிக்கையோடு அவருக்குக் கீழ்ப்படிந்து ஊழியம் புரிகிறோம். இறை அன்பு என்னும் புண்ணியத்தால் அவரை நேசிக்கிறோம். "ஆண்டவரே தேவரீர் உமது திருச்சபையின் வழியாகப் படிப்பிக்கிற பேருண்மைகளை எல்லாம் நான் விசுவசிக்கிறேன்; இறைமகன் யேசுவின் பேறுபலன்களை முன்னிட்டுத் தேவரீர் எனக்கு மோட்ச சம்பாவனை தருவீர் என்று நம்பியிருக்கிறேன்; உம்மை எல்லாவற்றிலும் பார்க்க மேலாக நேசிக்கிறேன்" என்று இவ்வாறாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் அடிக்கடி சொல்லிக் கொள்ள வேண்டியது. காரணம், இறைவனைப் பிரியப்படுத்தச் சிறந்த வழி, இறை சம்பந்தமான மேற்படி மூன்று புண்ணியங்களுமாம்.

நன்றி: மோட்சபாதை

இப்பந்தியிலிருந்து இவ்விரு சொற்களையும் தெரிவு செய்யுங்கள்.

1) பொய்க்கு எதிரான சொல்.
2) இவரை அப்பா, பிதாவே என்று அழைக்கிறோம்.

விடையை இப்பொழுது அனுப்ப வேண்டாம். அனுப்பச் சொல்லும் வரை காத்திருங்கள்.

* * *

### வேண்டுகின்றோம்

சாதி ஒழிய—நல் சமத்துவம் நிலவ
பொறாமை ஒழிய—தீய போர்கள் நீங்க
பாவங்கள் மறைய—நல் பாவிகள் மனம் மாற
பிரிவினை நீங்க—பின பிரிவுகள் இணைய
ஒற்றுமை நிலவ—நல் ஒருமைப்பாடு ஓங்க
இன்னல்கள் நீங்கி—சுக இன்பங்கள் பெருக
இலட்சியத்தின்—நல் இலக்கினை அடைய
ஆண்டவரின் ஆசிபெற்று
அன்புடன் வாழ
உண்மை பேசி
உத்தமராக வாழ
உன்னருள் வேண்டுகின்றோம்.

S. அன்புராஜ், ஆண்டு 11
அங். எண்: 56

### விவிலியக் குறள்


வாழ்விக்கும் வார்த்தைகளை வாசித்து வாழ்பவர்
வான்வீட்டில் வாழ்வாங்கு வாழ்வர்.

### 'எம் கருத்து'க் குறள் தெளிவுரை

அசைவற்ற தெளிந்த அறிவினையுடையவர், துன்பத்தில் சிக்குண்டாலும் (அத்துன்பத்தைத் தீர்ப்பதற்காகவும்) இழிவான செயல்களைச் செய்யமாட்டார்.

## வேதாகமக் குறுக்கெழுத்துப்போட்டி-3

### இறைவாக்கினர் மிக்கேயாஸ் ஆகமம்



**மேலிருந்து கீழ்**

1 செல்வர்கள் செய்யும் கொடுமைக்கு அவர்கள் உரிமைச்சொத்தெல்லாம் —என்று புலம்புவார்கள்.

2 இந்த வீட்டாரின் பாவம் யாது? என்று வினவியதால் இங்கு அந்த வீட்டார்கள் தலைகீழாக இருக்கிறார்கள்.

3 இது ஒரு மிருகம்.

4 அவர்களின் — அனைத்துலக இறைவனாகிய ஆண்டவருக்கு அர்ப்பணிப்பாய்.

5 இதைப் பிடித்து பாகம் பிரித்து உங்களுக்குத் தருபவன் ஆண்டவரின் சபையில் ஒருவனும் இரான் என்றபடியினால் இது இங்கே தலைகீழாக உள்ளது.

8 பேயோரின் மகனின் பெயர் கீழிலிருந்து மேலாக வுளளது.

10 இறைவனாகிய ஆண்டவர் உங்களுக்குஎதிராக தீதைச் செய்யப் போகிறபடியால் இங்கே இது குழம்பியிருக்கிறது.

11 வகையாக இதைப் புனைகின்றபடியினால் இங்கே இது குன்றியிருக்கிறது மலலாமல் தலைகீழாக வுள்ளது.

12 யெருசலேமில் இருந்து இது புறப்படும்.

16 எண்ணப்பார்; இதன் செயல்களை உணர்வாா.

19 நமக்கு கீழ்ப்படியாத மக்—களின மல் பழிதீர்த்துக்கொள்வோம்.

21 ஒரு — முதல் மறு—வரை உள்ள மக்கள் யாவரும் உன்னிடம் வருவார்கள். தலைகீழாகவுள்ளது.

22 இது ஒரு குடி.

**இடமிருந்து வலம்**

1 சமாரியாவின் கற்களை இங்கேஉருட்டிவிடுவோம்.

6 தலைவனும் நீதிபதியும் கை — க் கேட்கின்றனர். வளம் மாறியுள்ளது.

7 இந்த கோயிலுள்ள மலையானது காடாகும்.

9 அமரியின் இவைகளைக் கடைப்பிடித்தாய் ஆதலின் உன்னை அழிவுக்குக் கையளிப்போம்.

13 வயிற்றுக்குத் தீனி குழம்பியிருக்கிறது.

14 நம் — களையெல்லாம் ஆழ்கடலில் எறிந்துவிடுவார்.

15 நீ சாப்பிட்டாலும் உனக்கு அடங்காது.

17 இது ஒரு பறவை.

18 இது ஒரு ஆயுதம். இவைகளை அரிவாள்களாக அடிப்பார்கள்.

20 ஆடுகளைக்— டை—மடக்குவது போலுப ...

...

23 உமது திருப்பெயருக்கு அஞ்சி நடத்தலே உண்மையான —

24 குதிரைகளை இவற்றோடு சேர்த்துப் பூட்டு.

25 ஆடையின்றி நாணத்தடன் அகலுங்கள் என்று இக்குடிக்குச் சொன்னபடியினால் வளம் மாறியும் குன்றியும் உள்ளது.

**போட்டி 2, சரியான விடைகள்**

**வேதாகமக் குறுக்கெழுததுப் போட்டி-2.**

மேலிருந்து கீழ :-

1. கொங்கை, 2. பெரியவாகள, 3. தனி, 5. நீமர என் கடவுள், 6. திகாற்ற, 7. சாவே 8. காபா 9. வழக்கு, 11. வழிகள், 12. கறை, 15. வான், 16. புலி

இடமிருந்து வலம் :-

1. கொலை, களவு 2. பெருகச், 3. தரீசு, 4. கைம்மாறு, 5. நீதி, 7. சாமக்காவலா, 10. வேசி, 13. குடி, 14. கருவால். 17. அழிவு, 18. அன்பு பெருதவள்

சரியான விடை எழுதியவர்கள்

1 ம. பற்றிக் குணசீலன் சென் ஜேமஸ், இளவாலை.

2 மேர்மலர் மரியாம்பிளளை சென் ஜேம்ஸ், இளவாலை.

3 அ. போல் நியூமன், பண்டத்தரிப்பு.

4 நிர்மலா அந்தோனிப் பிள்ளை, பற்றிமா வீதி, மாதகல்.

5 இ. யோசப் மக்சிமஸ் ஊறணி, காங்கேசன்துறை

6 இ. அன்ரனி ஜெரோம் ஊறணி, காங்கேசன்துறை

7 நித்தியவதனி பெனடிக்ற் சென் ஜேம்ஸ், இளவாலை.

8 இருதயராஜ் பிலிப், சென்ஜேம்ஸ், இளவாலை.

9 ஜே. தீபன் சோசை வட்டாரம் I, வங்காலை.

10 ம. லோறன்ஸ் சென் ஜேம்ஸ் இளவாலை.

பரிசுபெறும் நற்பேறுளர்
ம. புளோறன்ஸ் சூசைதாஸ்
சென் ஜேம்ஸ், இளவாலை.

விடைகளை அனுப்பவேண்டிய இறுதிநாள் 20-6-88
அடுத்த போட்டி 01-7-88

வேதாகம குறுக்கெழுத்துப் போட்டி-2-இல் பங்குபற்றிய அனைவருக்கும் நன்றி. அயலவர்களையும் வேதாகம வாசிப்பிலே ஊக்குவியுங்கள்.

பரிசு ரூபா 25/-

## ஓர் அழைத்தல்

**இளைஞனே!**

அமைதியின் தூதுவனுக்கப்பட குறிப்பாக உங்களை இறைவன் இதோ அழைக்கிறார்!!

**அன்று.** எங்கள் கிறிஸ்து பெருமானார் ''என்னைப் பின்செல்லுங்கள்'' என்று தம் அப்போஸ்தலர்களை அழைத்தார்.

**12-ம் நூற்றுண்டிலே.** எங்கள் கிறிஸ்து பெருமானார் ''என் ஆலயம் பாழடைந்து போகிறது. அதைத் திருத்து'' என்று ஐந்துகாயப்பர் புனித பிரான்சிஸ் அசீசியாரை அழைத்தார்.

**இன்று.** அமைதியை இழந்து பரிதவித்து நிற்கும் எங்கள் பகுதிகளில் புனித பிரான்சீஸ் அசீசியாரின் செபத்தை செயற்படுத்த உங்களை இறைவன் இதோ அழைக்கிறார்.



புனித பிரான்சீஸ் அசீசியார்

### புனித பிரான்சீஸ் அசீசியாரின் செபம்

இறைவா! அமைதியின் தூதுவனாக என்னைப் பயன்படுத்தும்.
பகையுள்ள இடத்தில் பாசத்தையும்.
மனவேதனையுள்ள இடத்தில் மன்னிப்பையும்,
ஐயமுள்ள சூழலில் விசுவாசத்தையும்,
அவநம்பிக்கையுள்ள மனதில் நம்பிக்கையையும்,
இருள் சூழ்ந்த இடத்தில் ஒளியையும்,
துயரம் நிறைந்த உள்ளத்தில் மகிழச்சியையும்,
வழங்கிட எனக்கு அருள் புரியும்,
தெய்வீகக் குருவே!!
ஆறுதல் பெறுவதைவிட ஆறுதல் அளிக்கவும்,
பிறர் என்னைப் புரிந்துகொள்ள விரும்புவதை விட
பிறரைப் புரிந்து கொள்ளவும்,
பிறருடைய அன்பை அடைய ஆசிப்பதை விட
பிறருக்கு அன்பை அளிக்கவும்,
எனக்கு அருள்வீராக.
ஏனெனில், கொடுக்கும்போது மிகுதியாகப் பெறுகிறோம்.
மன்னிக்கும் பொழுது மன்னிப்பை அடைகிறோம்.
மரிக்கும் பொழுது நித்திய வாழ்விற்குப் பிறக்கிறோம்.
எனவே, சுயநலமற்ற வாழ்வில்
அமைதியை அடைகிறோம். ஆமென்.

★ 8-ம் வகுப்பு சித்தியடைந்தோரும் அதற்கு மேற்பட்ட வகுப்பு மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்கும் விலாசம் :

**அருட்திரு. நீ. பீற்றர் O.F.M.**

பங்குத்தந்தை, புனித மரியாள் ஆலயம், விடத்தல்தீவு, மன்னார்.

## தேனருவி

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீட்பின் வரலாற்றின் முக்கிய தேர்வுகளில் இவ்வுண்மை புலனாகிறது. இனத்தின் முது பெரும் தந்தையான ஆபிரகாமிலிருந்து, தலைவர்கள், இறைவாக்கினர், அரசர்கள் அனைவரதும் தேர்வுகளுக்கு அவர்களது பலவீனமே அத்திவாரமாகிறது. ஏன் இஸ்ராயேல் இனமே ஒரு சிறுபான்மை இனம்தானே. புதிய ஏற்பாட்டிலும்கூட இதே உண்மை உறுதிபெறுகிறது. மரியாள் தன் தாழ்நிலையை உணருகிறாள், இயேசு ஒரு தச்சனின் மகனாக எண்ணப்படுகிறார். அவர் வளர்ந்த ஊரான நாசரேத்து எளிமையானது. அவர் சீடர்கள் நாளாந்த தொழிலாளரும், பாவியர்களும்.

''தாழ்ந்த, உலர்ந்த மரத்தை தழைத்து ஓங்கச் செய்பவர்'' இறைவன்.

விதைகளில் எல்லாம் மிகச் சிறியது செடிகளில் எல்லாம் மிகப் பெரிதாகிறது.

இறைவனின் தேர்வும், செயற்பாடும் எமக்கு என்றும் வியப்பானதே. அதனால்

தோற்றத்தைக் கண்டு அலட்சியம் செய்துவிடாதீர். சிறியவர் என்பதனால் ஏளனம் செய்யாதீர். பலவீனர் என்று தட்டிக்கழித்து விடாதீர். ''சிறுதுளிதான் பெருவெள்ளமாகிறது'' சிறியது என எண்ணி அலட்சியம் செய்யாது அனைத்திற்கும் பின்னணியில் ஆண்டவன் உள்ளார் என்பதை உணர்ந்து மதிப்பளியுங்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தொபியாஸ் யூட்மறின் (ருஜி)

மலர்வு: 08-08-1968 உதிர்வு: 02-06-1987

''அழைப்பின் குரல் கேட்டேன்
ஆண்டவன் என
உணர்ந்தேன்''

மதுரமான யேசுவே ! நீர் காட்டிய பாதையில் வாழ்ந்து உமது அழைப்பை ஏற்று உம்மிடம் ஓடிவந்த இவரை அமைதியும் ஆறுதலும் நிறைந்த உமது இன்ப சன்னிதானத்தில் சேர்த்தருளும்.

பெற்றோர், சகோதரர், உறவினர்.

3ஆம் வட்டாரம்
மண்டைதீவு. A/57

## 10-வது ஆண்டு நிறைவு



தியோ இராசேந்திரம்

தோற்றம்: 17-12-1907 மறைவு: 06-06-1978

பாசத்தின் குல விளக்கே எம்
பரிவின் கொடிமுடியே.........
அன்பெனும் தீபத்தை எங்கள்
அகங்களில் ஏற்றிவைத்தாய்-நீ
ஆண்டவன் பாதம் சென்று
ஆண்டுகள் ஈரைந்தாய் கழித்தனவோ—
அகவைகள் ஆயிரம் அகன்றிடலாம்—
இதயம் ஒன்று இருக்கும் வரை
இனிய உம் நினைவுகளோ
அகலாதையா.

இவரின் ஆன்ம சாந்திக்காக பாஷையூர் புனித, அந்தோனியார் ஆலயத்தில் 06 06-88 திங்கட்கிழமை காலை 6-15 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

என்றென்றும் நினைவு கூரும்,
மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்.

A/42

பாதுகாவலன்
PATHUKAVALAN

## வேளாங்கண்ணி ஆலயவிழா

கரம்பொன் பங்கில் திறந்த வெளியிலமைந்துள்ள அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் வைகாசி 22 ம் நாள் ஞாயிறு மாலை பங்குத்தந்தை அருள்திரு லோறன்ஸ் சேவியர் அடிகளார் ஆரோக்கிய அன்னையின் கொடியை செபவழிபாட்டுடன் உயர் கம்பத்தில் பறக்க விட திருவிழா ஆரம்பமாகியது. அருள்திரு ஆபரணம் சிங்கராயர் அடிகளார் நாளாந்தம் 'மரியாளின் மறுபிரசவம்' அதாவது, சிலுவையடியில் அவளின் மறு பிரசவமாக திருச்சபை உருவாகிறது. "மரியாள் விண்ணிலிருந்து விழுந்தவளா," "அகதியான அன்னை மரியாள்" போன்ற தலைப்புக்களில் மறையுரை ஆற்றினர்.

மரியன்னைக்கு வழிபாடா என்று எதிர்ப்புசக்திகள் பிரசாரம் செய்துவரும் இந்நாட்களில் அவர்கள் எழுப்பும் வினாக்களுக்கு விடை காணமுடியாத நிலையில் ஏங்கிக்கிடந்த மக்களை தட்டி எழுப்பிவிட்டார். தகுந்த ஓர் கலந்துரையாடல் வழியாக உண்மையைப்புரிய வைத்தார். "துன்பக்கலத்தைச் சுவைத்தவள்" என்ற தலைப்பில் அடிகளார் தமது கடந்த காலத்துக் கொடூர சிறை அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார். அன்னை மரிதன்னை வழிநடத்தியதை எடுத்துக்காட்டினர்.

மே 28 சனிமாலை 5 மணிக்கு புனித செபஸ்தியார் ஆலயத்திலிருந்து செபமாலைப்பவனி ஆரம்பமாகி வேளாங்கண்ணி ஆலயத்தை அடைந்தது.

"கொலைக்களத்தில் அம்மா" என்ற தலைப்பிலான எட்டாம் நாள் மறையுரை அன்னையின் மனநிலையும், தியாகவாழ்வும் உருவாக வேண்டுமென விளக்கியது.

ஒன்பதாம் நாள் மாலை நற்கருணை ஆசீர் அருட்திரு M. E. பயஸ் அடிகளாரால் வழங்கப்பட்டது. 31 ம் திகதி காலை திருநாட்திருப்பலி கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருவிழா திருப்பலிக்குத் தலைமை தாங்கிய அருட்திரு S. J. இம்மனுவேல் அடிகள் இந்த ஆண்டு மரியாளின் ஆண்டு என்பதையும், இந்த இக்கட்டான நிலையில் அவளின் அருள் நமக்குத் தேவை என்பதையும் வலியுறுத்தினர்.

## சேவையில் மூன்றுண்டு நிறைவு

10 ×70



மன்னர் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கத் தலைவர் குருமுதல்வர் அருள்திரு சேவியர் குருஸ் அடிகளாரும் உறுப்பினர்களும் மன்னார் ஆயர் பேரருள்திரு சவுந்தரநாயகம் ஆண்டகையுடன் நிற்கும் காட்சி.

"மூன்றுவது ஆண்டின் நிறைவை பூர்த்திசெய்யும் மன்னார் துயர் துடைப்புச்சங்கம் பல்வேறு துன்பதுயரங்களால் இன்னல் இடையூறுகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன, மத, மொழி வேறுபாடின்றிப் பணியாற்றிவருகின்றது." என அதன்தலைவர் அருள்திரு சேவியர்குருஸ் அடிகளார் குறிப்பிட்டார்.

"மன்னார்மாவட்ட மக்களை நாம் தொழிலடிப்படையில் நோக்குகின்றபோது விவசாயிகள் 70 சத வீதமாகவும், மீனவர் 20 சத வீதமாகவும் உள்ளனர். இவர்கள் கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட தொடர்பான வன்செயல்களினால் தொழிலில் மிகவும்பாதிப்படைந்துள்ளனர். இந்த ஏழை விவசாயிகள் தமது தொழிலில் மீண்டும் சிறு முன்னேற்றம் காணும்பொருட்டு, கடந்த ஆண்டில்பசளை, உரம் போன்ற சில உதவிகளை இச்சங்கம் பொதுநிறுவனங்களிடமிருந்து பெற்று, வழங்கியுள்ளது.

"மீனவர்களிற் பெரும்பான்மையோர் இந்தியாவிலிருந்து மீண்டும் தாயகம் திரும்பிய மக்களாவர். அவர்களது தொழில்உபகரணங்கள் பாதிக்கப்பட்டு தொழிலை ஆரம்பிக்க முடியாமல் தவித்துக்கொண்டிருக்கும் இத்தருணத்தில், எமது சங்கமானது அவர்களுக்கும் உதவிபுரிய வழிவகைகளை மேற்கொண்டுள்ளது.

"எமது சங்கம் தனது துயர் துடைக்கும் பணியை தன்னால் இயன்றளவு செவ்வனே நிறைவேற்ற உள்ளூர் - வெளியூர் சேவை நிலையங்கள், பொது நிறுவனங்கள், அரசநிறுவனங்கள், பொதுமக்கள் போன்றோர் துணை புரிகின்றனர். இடர் மிகுந்த இக்காலத்தின் துயர் மிக்க மக்களது துயர்துடைக்க முன்வந்து பணியாற்றும் இச்சங்கத்தின் தலைவர் என்ற முறையில் எனது சார்பிலும், இச்சங்கத்தின் உறுப்பினர்கள் சார்பிலும் எனது நன்றியை அவர்களுக்குத் தெரிவிக்கின்றேன்" என அடிகளார் தமது மூன்றுவதாண்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## மரியாளின் ஆண்டில் யாத்திரை

அன்னை மரியாளின் அருள் வேண்டி பங்குகளில் குடும்பம் குடும்பமாகவும், குழுக்களாகவும், பக்திச்சபைகளாகவும் மடுத்திருப்பதிக்கு யாத்திரை செய்யவும், பரிபூரண பலனைப் பெற்றுக்கொண்டு மனநிறைவோடு தங்கள் பரலோக யாத்திரைக்குத் தயாராக இருக்கவும், இறைவன் வழிகாட்டுவாரா என்று ஏங்கி நின்ற புனித சூசையப்பர் சபை (நல் மரண ஆயத்தசபை) யினர்க்கு மரியாயின் ஆண்டில்வைகாசித் திங்களில் 17 - 18 ம் நாட்கள் நிறைவாயின. ஐம்பதுவயதுக்கும் தொண்ணுற்றைந்து வயதுக்கும்இடைப்பட்ட வயோதிபர்கள் நாற்பது உறுப்பினர்கள் வங்காலைப் பங்கிலிருந்து 17 ம் திகதி மடுத்திருப்பதிக்குச் சென்ற காட்சி மன்னார், உயிலங்குளம் முருங்கன் இராணுவ வீரர்களுக்கே வியப்பானதாய் அமைந்தது.

பங்குத்தந்தை அருள்திரு. அருள்நாதன் அடிகள் அன்று மாலையும் அடுத்தநாளும் பக்தர்கள் அன்னைமரியாளையும், அவரின் கருணை வாழ்வையும் சிந்திக்க மறைக்கருத்துக்களை வழங்கினர்கள். இரவு மெழுகுவர்த்திகளுடன் ஆலயத்திலிருந்து லூர்துகெபிவரை இப்பக்தர்களோடு திருக்குடும்பக் கன்னியர்களும் அன்னையைப் புகழ்ந்துபாடிச் செபித்து நன்றி செலுத்தினர்கள்.

தகவல். சி. அ. லெம்பேட்,

## நூற்றுண்டு விழா

மாதகல்

புனித அந்தோனியார் ஆலயத்தின் நூற்றுண்டு விழா வழிபாடுகள் இம்மாதம் 4ஆம் திகதி மாலை 5-30 மணிக்கு ஆரம்பமாகின்றது.

திருநாட் திருப்பலிப்பூசை 13—6—88 காலை 7 மணிக்கு யாழ். ஆயர் வந்தனைக்குரிய வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் ஒப்புக் கொடுக்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பங்குத் தந்தையும்
மக்களும்

## ஈராண்டு நிறைவு விழா நுாரலையில்

நுவரெலியா பிராந்திய கிறிஸ்தவ வாழ்வுச் சமூகம் 1988ம் ஆண்டு வைகாசித் திங்கள் 18ம் நாள் தனது இரண்டாம் ஆண்டு நிறைவு தினத்தை மிகச் சிறப்பாக நுவரெலியா பங்கில் கொண்டாடியது. அத்தினத்தை மேலும் சிறப்பிக்கும் முகமாக இந்தியாவிற்குச் சென்று இறையியற் படிப்பை முடித்துக் கொண்டுஎமது தாய்நாட்டிற்கு திரும்பிய அருட் சகோதரி எலிசபெத் அரைநாள் தியானத்தை முன்னின்று நடத்தியது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து சில தனிப் பயிற்சிகளும், குழுப் பயிற்சிகளும் நடத்தி எம்மை மேலும் வளர்த்தார். பின் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. அதில் பிராந்திய தலைவர் உரை; கூட்டறிக்கை; செயல் திட்டம் வகுத்தல்; சமூக அங்கத்தினர் அபிப்பிராயம்; ஞான ஆலோசகர் உரை என்பவற்றுடன் பிராந்திய செயலாளரின் நன்றியுரையும் இடம்பெற்றது.

—அ. நோயல் ஜோஜ்

## மரியன்னையின் கண்காட்சி

மரியாளின் மகத்துவத்தை மாந்தர்க்கு எடுத்துரைக்க மயிலை - ஊறணிப் பங்கில் மாதா கண்காட்சி ஒன்று இடம்பெற்றது.

'மரியன்னையின் மகத்துவம்' என்ற தலைப்பில், மே 30ம், 31ம் திகதிகளில் மயிலிட்டி றோ. க. த. பாடசாலையில் இக் கண்காட்சி இடம்பெற்றது. இதை அருள்திரு ம. இ. பயஸ் அடிகளார் திறந்து வைத்தார். பங்கின் வழிபாட்டுக்குழு இக்கண்காட்சியை செயற்படுத்த. பங்கிலுள்ள மற்றைய பக்திச்சபைகளும், பங்கு அமைப்புக்களும் உதவிக்கரம் நீட்டி நின்றன. மறைநூலில் மரியன்னை, பாரம்பரியத்தில் மரியன்னை, திருச்சங்கப் படிப்பினைகளில் மரியன்னை, காட்சிகளில் மரியன்னை போன்ற அம்சங்களில் இக்கண்காட்சியின் சாரம் உள்ளடக்கப்பட்டிருந்தமை அறியக்கூடியதாக இருந்தது.

மரியன்னையைப் பற்றியும், அவளின் மகிமையைப் பற்றியும் பல புதிய விடயங்களை அறிந்துசெல்ல, யாழ்ப்பாணம், அச்சுவேலி, சில்லாலை, சுன்னாகம் போன்ற பல இடங்களிலுமிருந்து மக்கள் மயிலிட்டிக்கு வந்திருந்தார்கள். இக்கண்காட்சிக்கு முன்னோடியாக, இதே தலைப்பில், இருநாள் கருத்தரங்கும் இடம்பெற்றது. அதனை அருட்திரு ஜெய்சிலன் அடிகளார் நடத்தினர்.

—தகவல்: R. இராஜேஸ்வரி

## உபகரணங்கள் விநியோகம்

யாழ். மறைவட்ட மனித முன்னேற்ற நடு நிலையம் வழங்கிய தோட்டத்தொழிலாளர்களுக்கான உபகரணங்கள் 15-05-1988ல் மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயத்தில் இலவசமாக விநியோகிக்கப்பட்டன. கடந்த காலத்தில் இழப்புகளுக்கு இலக்கான பலாலி, மயிலிட்டி, வீமன்காமம், வறுத்தலைவிளான், கட்டுவன், தெல்லிப்பளை ஆகிய இடங்களைச் சார்ந்த சுமார் நானூறு பேருக்கு இவ்வுதவிகள் வழங்கப்பட்டன.

மண்வெட்டி, அலவாங்கு, கத்தி ஆகிய இவ்வுபகரணங்களை மயிலிட்டி ஊறணிப் பங்குத்தந்தை அருள்திரு பீற்றர் துரைரட்ணம், உதவிப் பங்குத் தந்தை அருள்திரு சூசைநாதன் ஆகியோரின் அனுசரணையுடன் மயிலைப் பங்கு இளைஞர் ஒன்றியம் வழங்கியது.

இப்பத்திரிகை திரு நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1988-ம் ஆண்டு யூன் மாதம் 3ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னுேடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்